

# அரச பஸ் சேவைகளுக்கு கட்டுப்பாடு

நா.தினுஷா

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டளவில் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 481 பிலவ வருடம், பங்குனி மாதம் 03ஆம் திகதி வியாழக்கிழமை (17.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 13, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

# ஒரு மாதமாக 3,500 கொள்கலன்கள் துறைமுகத்தில்

யோ.தர்மராஜ்

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடியால் இறக்குமதி செய்யப்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களடங்கிய 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட கொள்கலன்கள் ஒரு மாதத்திற்கும் மேலாக விடுவிக்கப்படாதுள்ளதாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி விற்பனையாளர்கள் சங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் 'தமிழன்' நாளிதழிடம் நேற்று தெரிவித்தார்.

02 பக்கம்

# நெருக்கடியை தீர்த்து வைப்பேன்: நம்பிக்கையை கட்டிக்காப்பேன்!



நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி கோட்டாபய

03 பக்கம்

# கட்டுப்படுத்த முடியாதளவு நிலைமை கைமீறியுள்ளது

எரிபொருள் தட்டுப்பாடு குறித்து வலுசக்தி அமைச்சின் செயலர் தெரிவிப்பு



02 பக்கம்

## லிட்ரோ, லாஃப்ஸ்

# எப்போது கிடைக்கும் என்பது நிச்சயமில்லை!

எரிவாயு விநியோகம் அதிரடியாக இடைநிறுத்தம்

இரு எரிபொருள் கப்பல்கள் 11 நாட்களாக துறைமுகத்தில் தேக்கம்

நாடு முழுவதும் பால்மாவுக்குத் தட்டுப்பாடு

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கும் சாத்தியம்

யோ.தர்மராஜ், கே.சுபானி

நாட்டில் எரிபொருள், எரிவாயு, பால்மா உள்ளிட்ட பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். டொலர் தட்டுப்பாடு காரணமாக லிட்ரோ, லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டர்களுக்கான விநியோகத்தை அந்நிறுவனங்கள் நேற்று முதல் இடைநிறுத்தியுள்ளன. அவ்விரு நிறுவனங்களினதும் திடீர் அறிவிப்பு காரணமாக வாடிக்கையாளர்கள் செய்வதறியாது வீதிகளில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

02 பக்கம்



# மருந்தின்றி எவரேனும் உயிரிழந்தால் பெசிலே பொறுப்பேற்க வேண்டும்

கம்மன்பில ஆவேசம்

யோ.தர்மராஜ்

நாட்டில் பொருட்களைப் பெற்றுக் கொள்ள மக்கள் வரிசையில் காத்திருப்பதற்கு நிதி அமைச்சரின் தவறே காரணமாகும். புற்றுநோய், சிறுநீரக நோய் மற்றும்

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



தலைக்கு மேலே வெள்ளம் போனா சாண் என்ன முழம் என்ன....



இந்தியாவுக்கு இருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை புதுடில்லியில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

# மின் கட்டணம் அதிகரிக்கும்


யோ.தர்மராஜ்

எரிபொருட்களின் விலை உயர்வை சமாளிக்கும் வகையில் மின் கட்டணத்தை அதிகரிக்க இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது.

விலை அதிகரிப்பு சதவீதம் குறித்து தீர்மானிக்கும் விசேட கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் நேற்று இடம்பெற்றது.

எரிபொருள் விலை அதிகரிப்பு, உற்பத்திச் செலவு அதிகரிப்பு, மின்சார அலகு ஒன்றிற்கான நட்டத்தின் அதிகரிப்பு, ஒன்பது வருடங்களாக மின்சாரக் கட்டணம் அதிகரிகப்படாதது போன்றவற்றைக் கருத்திற்கொண்டு மின் கட்டணத்தை அதிகரிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளதாக அறிய முடிந்தது.

02 பக்கம்






# உலகக்கிண்ணம் வென்று இன்றுடன் 26 வருடங்கள்

12 பக்கம்

# பயங்கரவாதத் தடைச்சட்ட விவாதம் மார்ச் 22இல்

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டை எதிர்வரும் 22ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பதில் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

02 பக்கம்

## உஷ்



ஜனாதிபதியின் சர்வகட்சி கூட்டத்தை பகிஷ்கரிக்க விமல்,வாசு, கம்மன்பிலவின் கட்சிகள் தீர்மானித்துள்ளனவாம்.

கூட்டத்தில் கலந்துகொள்வதா இல்லையா என்பதை ஆராய்ந்து வருகிறதாம் ஜே.வி.பி. அதேசமயம் சர்வகட்சி கூட்டத்தை மேலும் சில கட்சி கள் புறக்கணிக்கவுள்ளதாக தகவல்.

# வெளிநாட்டுப் பிரஜையொருவர் நாடாளுமன்ற உறுப்பினராகுவதற்கு நாம் உடன்படவில்லை

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(யோ.தர்மராஜ்)

நாடாளுமன்றத்தில் 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு உடன்படும்போது வெளிநாட்டுப் பிரஜாவுரிமைகொண்ட எந்தவொரு நபரையும் நாடாளுமன்றத்திற்குள் பிரவேசிப்பதற்கு அல்லது அமைச்சுப் பதவியை வகிப்பதற்கு தாங்கள் உடன்படவில்லை - என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பொரளையில் நேற்று (16) இடம்பெற்ற 11 பங்காளிக்கட்சிகளின் முதல் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இரு அமைச்சர்களை அரசாங்கம் நீக்கிய தனாலேயே அடுத்தகட்ட செயற்பாடுகள் குறித்து நாங்கள் தீர்மானிக்க வேண்டியுள்ளது. என்னை இதுவரை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கவில்லை. அதனால்தான் தொழில்நுட்ப ரீதியாக அமைச்சராக இருக்கின்றேன். ஆனால், மக்களுக்கு ஏதேனும் தேவையான அனுமதி பெறுவதற்கு தனது கையொப்பம் தேவைப்படுவதைத் தவிர, தனது அமைச்சுக் கடமைகளிலிருந்து விலகியுள்ளேன். அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை.

இதேவேளை, இரட்டைக் குடியுரிமைகொண்ட எவருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படமாட்டாது என அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியபோது எட்டப்பட்ட ஒப்பந்தத்தை அரசாங்கம் மீறியுள்ளது.

20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு உடன்படும்போது வெளிநாட்டு பிரஜாவுரிமை கொண்ட எந்தவொரு நபரையும் நாடாளுமன்றத்திற்குள் பிரவேசிப்பதற்கு அல்லது அமைச்சுப் பதவியை வகிப்பதற்கு நாங்கள் உடன்படவில்லை.

இது தொடர்பில் ஜனாதிபதியுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினோம். இந்த விடயத்தின் அடிப்படையில் 20ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கப்போவதில்லை எனவும் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளோம். எனினும், தனது பிரஜாவுரிமை தொடர்பில் தமக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மாற்றியமைப்பதற்காகவே 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற விரும்புவதாகவும், அது அமைச்சர் பெசில் ராஜபக்ஷவையோ அல்லது வேறு எந்த நபரையோ நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவருவதற்காக அல்ல என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

எனினும், பல நாட்களுக்குப் பின்னர் அமைச்சர் பெசில் ராஜபக்ஷவை நாடாளுமன்றத்திற்குள் பிரவேசிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். பின்னர் நிதி அமைச்சு பதவியும் வழங்கினார்.

ஆனால், பெசில் ராஜபக்ஷ தன்னுடைய இரட்டை குடியுரிமையை பாதுகாப்பதற்கும் அதுவே அவருக்கு முக்கியம் என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம் - என்றார்.

### ஒரு மாதமாக...

நாட்டில் ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு குறித்து வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிகமாக வர்த்தக வங்கிகள் வெளிநாட்டு இறக்குமதிகளுக்காக உரிய டொலரை வழங்குவதில்லை. இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களை விடுவிப்பதற்கான டொலரை இறக்குமதியாளர்களுக்கு வழங்குவதில்லை. இதனாலேயே நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன.

இறக்குமதிசெய்யப்படும் உணவுப் பொருட்களுக்கான டொலரை உரிய முறையில் இறக்குமதியாளர்களுக்கு வழங்குவார்களாயின் பொருட்களின் விலைகள் கட்டுப்பாட்டுக்கு வரும். இல்லையேல், இறக்குமதி செய்யப்படும் கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கி கிடப்பதுடன், அதற்கான தாமத கட்டணத்தையும் நாங்கள் செலுத்த வேண்டியுள்ளது. இந்தக் கட்டணங்களும் விலை அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு டொலர் தட்டுப்பாடு மாத்திரமன்றி, இருக்கும் டொலரையும் முறையாக வழங்காதமையே இதற்குக் காரணமாகும்.

இதுவரை 3 ஆயிரத்து 500 கொள்கலன்கள் ஒரு மாதத்திற்கும் மேலாக விடுவிக்கப்படாது துறைமுகத்திலேயே தேங்கிக் கிடக்கின்றன. இவ்வாறு இந்த நிலைமை தொடர்ந்தால் பொருட்களின் விலைகள் மேலும் மேலும் அதிகரிக்கும் - என்றார்.

### மின் கட்டணம்....

இலங்கை மின்சார சபையானது வருடத்திற்கு 25 ஆயிரம் மில்லியன் ரூபா நட்டத்தை சந்திப்பதால் தற்போது மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதை தவிர, வேறு மாற்றுவழிகள் இல்லை எனவும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப் பட்டால், நீர்க் கட்டணத்தை அதிகரிக்க நேரி டும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையும் தெரிவித்துள்ளது.

நீரை இறைக்க பயன்படுத்தப்படும் மின்சாரத்தையே அதிகளவில் பயன்படுத்துவதால் மின் கட்டணத்தின் விலைக்கேற்ப நீர்க் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டும் என வடிகாலமைப்புச் சபை கோரியுள்ளது.

### கட்டுப்படுத்த முடியாதளவு..

யோ. தர்மராஜ்

மக்கள் வரையறையின்றி தொடர்ந்து டீசலை சேகரித்து வைத்தால், தற்போதைய டீசல் தட்டுப்பாடு மேலும் உக்கிரமடைந்து, கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்படும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர் திருமதி ஓல்கா தெரிவித்துள்ளார்.

வலுசக்தி அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த காலத்தில் எரிபொருள் இறக்குமதியில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள போதிலும், தற்போது தேவைக்கேற்ப எரிபொருள் இறக்குமதி செய்துவருவதுடன், அதற்கான நடவடிக்கைகளும் தடையின்றி முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஓட்டோ டீசலை கட்டுப்பாடுகளின்றி அசாதாரண முறையில் கொள்வனவுசெய்து சேகரித்து வருகின்றனர். இந்த நிலைமை தொடருமாக இருந்தால் எரிசக்தி அமைச்சு மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இந்த நிலைமையை கட்டுப்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், மக்களின் இவ்வாறான செயற்பாடுகளினால் எரிபொருள் நெருக்கடியைத் தீர்ப்பதில் மேலும் காலதாமதம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

### அரச பஸ்...

இதேவேளை, கிராமிய மற்றும் தூர பிரதேசங்களுக்காக பஸ் சேவைகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால், தாம் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகுவதாகவும் பயணிகள் குறிப்பிடுகின்றனர்.

இருந்தபோதிலும், போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்கள் முறையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் பண்டுக்க சுவர்ணஹங்ச 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (16) தெரிவித்தார்.

போக்குவரத்துச் சபையின் சேவைகளின் தற்போதைய நிலைமை தொடர்பில் வினவியபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமிய மற்றும் தூர பிரதேசங்களுக்குச் செல்லும் பஸ்களின் போக்குவரத்து சேவைகள் இதுவரையில் இடைநிறுத்தப்படவில்லை. தற்போதுவரையில் போக்குவரத்துச் சபையின் சேவைகளை மட்டுப்படுத்துவதற்கான எந்தத் தீர்மானமும் இல்லை.

எவ்வாறெனினும் போக்குவரத்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட மாட்டாது. நீண்ட விடுமுறை நாட்கள் இருப்பதால் ஊர்ப் பிரதேசங்களுக்கு செல்லும் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கான போக்குவரத்து சேவையை வழங்க நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

போக்குவரத்துச் சபைக்கான எரிபொருள் கிடைக்கிறது. ஏனைய நாட்களில் மூன்று நாட்களுக்கான எரிபொருள் சில மணிநேரங்களில் நிறைவடைவதாக வலுசக்தி அமைச்சின் செயலாளரும் தெரிவித்துள்ளார்.

மக்கள் தமது தேவைகளுக்காக எரிபொருளை சேகரித்தல் உள்ளிட்ட சிககல் நிலைகளின் காரணமாக, எரிபொருள் கிடைப்பதில் காலதாமதம் இருக்கிறது. ஆனால், தற்போதுவரையில் தேவையான அளவு எரிபொருள் இருப்பில் இருக்கிறது.

பொதுவாக குறிப்பிடுவதானால், புறக்கோட்டை பஸ் தரிப்பிடத்திலிருந்து நாளாந்தாம் ஆயிரத்து 200இற்கும் அதிகளவான பஸ்கள் தூரப்பிரதேசங்களுக்கு பயணிக்கின்றன. சில தினங்களுக்கு ஏற்றத்தாழ்வு காணப்பட்டாலும் ஏனைய நாட்களைபோன்று நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் - என்றார்.

### பயங்கரவாதத்...

இதற்கமைய திருத்தங்களுடன் குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்படவிருப்பதாக ரோஹனதீர தெரிவித்தார். அன்றையதினம் நாடாளுமன்றம் முற்பகல் 10 மணிக்குக் கூடவிருப்பதுடன் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடைபெறும்.

மார்ச் 23ஆம் திகதி முற்பகல் 11 மணிமுதல் 4.30 மணிவரை காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழான 2251/48, 2262/50 மற்றும் 2266/5 இலக்க வர்த்தமானி பத்திரிகையின்கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

மார்ச் 24ஆம் திகதி முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அத்துடன், இலங்கை அரசாங்கத்திற்கும், துருக்கி குடியரசின் அரசாங்கத்துக்கும் இடையில் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பை நீக்குவதற்கும், வரி செலுத்தாது தட்டிக்கழித்தல் மற்றும் தவிர்ப்பு என்பவற்றைத் தடுப்பதற்குமாக 2022 ஜனவரி 28ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அன்றையதினம் அங்கீகரிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றம் மார்ச் 22ஆம் திகதிமுதல் 25ஆம் திகதிவரை கூடவிருப்பதுடன், 25ஆம் திகதி தவிர ஏனைய அனைத்து நாட்களிலும் முற்பகல் 10 மணி முதல் 11 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், 25ஆம் திகதி தவிர, ஏனைய நாட்களில் பிற்பகல் 4.30 மணிமுதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பிற்பகல் 4.50 மணிமுதல் பிற்பகல் 5.30 மணிவரையான காலப்பகுதியில் முறையே ஆளும் கட்சி, எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதத்தையும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மார்ச் 25ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 5.30 மணிவரை மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான அனுதாபப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது. இதன்படி, மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பெற்றி வீரக்கோன், தங்கேஸ்வரி கதிரமன், எம்.எஸ்.செல்லசாமி, ஜெஸ்டின் கலப்பதி ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அன்றைய தினம் வாய்மூல விடைக்கான கேள்விகள், 27 (2) நிலையியற் கட்டளையின்கீழ் கட்சித் தலைவர்களால் கேட்கப்படும் கேள்விகள், சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகள் மற்றும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை என்பவற்றுக்கு நேரம் ஒதுக்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

### மருந்தின்றி எவரேனும் ...

இருதய நோய்களுக்கு மருந்துகளின்றி நாட்டில் யாரேனும் உயிரிழந்தால் அதன் முழு பொறுப்பையும் அவரே பொறுப்பேற்க வேண்டும் - என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பொரளையில் நேற்று (16) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

இங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வெயிலில் காய்ந்து, மழையில் நனைத்துகொண்டு எரிபொருளுக்காகவும் எரிவாயுவுக்காகவும் பால்மாவுக்காகவும் பொது மக்கள் வரிசையில் துன்பப்படுகின்றனர். இந்த நிலைமை நிதி அமைச்சரின் தவறால் ஏற்பட்டது என்பதை பகிரங்கமாகவே கூறுகிறோம்.

பொருட்கள் இறக்குமதிக்காக கடந்த வருடத்தில் 20.6 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது. ஆனால், அதில் மருந்துகள் உள்ளிட்ட வைத்திய உபகரணங்கள், எரிபொருள், எரிவாயு மற்றும் நிலக்கரிக்காக 4.7 மில்லியன் டொலர் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. எனினும், அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கான 6 மில்லியன் டொலருக்கு அதிகமாக செலவிடப்பட்டுள்ளது.

எனவே, 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி கூறியதுபோன்று, அத்தியாவசியமற்ற பொருட்கள் இறக்குமதி செய்வதை வரையறுக்கப்பட்டிருந்தால் அத்தியாவசியப் பொருட்களுக்காக இன்று மணித்தியால கணக்கில் மக்கள் வரிசையில் காத்திருக்க வேண்டியதில்லை.

இதேவேளை, பொருளாதார நெருக்கடியை நோக்கி நாடு நகர்வதால் அதனை தடுப்பதற்கு முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகளை அப்போதைய நிதி இராஜாங்க அமைச்சராக இருந்த நிவார்ட் கப்ரால், 2020 ஒக்டோபர் 26ஆம் திகதி முன்வைத்தார். இதில் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை வரையறுக்குமாறு கூறியிருந்தார். அன்று அதனை செய்திருந்தால் இன்று மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியாது, மக்கள் வரிசையில் அவதிபட வேண்டியதில்லை.

புற்றுநோய், சிறுநீரக நோய் மற்றும் இருதய நோய்களுக்கு மருந்துகளின்றி நாட்டில் யாரேனும் இறந்தால் அதன் முழு பொறுப்பையும் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவே ஏற்க வேண்டும். மேலும், வரிசையில் மக்கள் அவதிப்படும் பொறுப்பையும் அவரே ஏற்க வேண்டும்.

இதேவேளை, பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டங்களை தயாரித்து, இதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுத் தருமாறு மத்திய வங்கியினால் 2021 ஒக்டோபர் முதலாம் திகதி அறிக்கையொன்று நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவிற்கு அனுப்பப்பட்டது. எனினும், நான் அமைச்சராக இருந்தபோது இடம்பெற்ற அனைத்து அமைச்சரவையிலும் அத்தோடு, என்னை அமைச்சுப் பதவியிலிருந்தும் நீக்கிய பின்னரான இரு அமைச்சரவையிலும் மத்திய வங்கியினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை அமைச்சரவை அனுமதிக்காக முன்வைக்கப்படவில்லை. எனவே, நாட்டின் பொருளாதாரத்தை சீரழிப்பதற்காக நிதி அமைச்சர் திட்டமிட்டு செயற்படுகின்றார் - என்றார்.

### லிட்ரோ, லாஃப்ஸ்...

நாட்டில் தொடர்ந்தும் அதிகரித்துவரும் டொலர் தட்டுப்பாட்டினால் பொருளாதார நெருக்கடி உச்சமடைந்துள்ளது. இதனால், எரிவாயு, எரிபொருள் மற்றும் பால்மா தட்டுப்பாடுகளுடன் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் உயர்ந்துள்ளன.

அந்திய செலாவணியின் கையிருப்பில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மற்றும் டொலருக்காக இலங்கை ரூபாவிற்கான பெறுமதியும் 300ஐ நெருங்கியுள்ளது.

டொலருக்கான தட்டுப்பாடு காணப்படும்போது, இறக்குமதி செய்யப்படும் பொருட்களடங்கிய கப்பலுக்கு டொலர் செலுத்த முடியாதமையினால், இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயு, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களடங்கிய கப்பல்கள் துறைமுகத்தில் பல நாட்களுக்கு மேலாக நங்கூரமிட்டுள்ளன.

**எரிவாயு தட்டுப்பாடு**

நாட்டில் டொலர் இன்மையால் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டினால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது. நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள எரிவாயு விற்பனை நிலையங்கள் மூடப்பட்டுள்ளதுடன், எரிவாயு இல்லை என்ற பதாகைகளும் தொங்கவிடப்பட்டுள்ளன.

லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு நிறுவனங்கள் தமது எரிவாயு விநியோகங்களை இடைநிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இரு எரிவாயு நிறுவனங்களிடமும் தற்போது போதியளவான எரிவாயு கையிருப்பு இல்லாததே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக கடனுக்கான கடிதம் விநியோகிக்காதமையினால் லிட்ரோ நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்ட எரி வாயு அடங்கிய இரு கப்பல்களை தரையிறக்குவதற்கு முடியாதுள்ளதாக நிறுவன வட்டார தகவல்கள் தெரிவித்தன.

அத்தோடு, லாவ் எரிவாயு விநியோகமும் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக அதன் தலைவர் டபிள்யூ.கே.எச்.வேஹப்பிட்டிய ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

லிட்ரோ எரிவாயு நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்டுள்ள எரிவாயு அடங்கிய இரு கப்பல்கள் துறைமுகத்தை அண்மித்துள்ள போதிலும், கடனுக்கான கடிதம் விநியோகிக்காதமையினால் குறித்த எரிவாயு தொகையினை தரையிறக்க முடியாதுள்ளதாக குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனால், நாட்டில் எரிவாயு விநியோகம் நேற்று (16) முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், லிட்ரோ எரிவாயு விநியோகமானது தொழிற்சாலைகள் மற்றும் தகன நிலையங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், தற்போது அதற்கும் விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், மீண்டும் எரிவாயு தட்டுப்பாட்டை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

இதேவேளை, லாவ் எரிவாயு நிறுவனத்தின் விநியோகமும் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக அதன் தலைவர் டபிள்யு.கே.எச்.வேஹப்பிட்டிய தெரிவித்துள்ளார். குறிப்பாக, நாட்டிலுள்ள டொலர் பிரச்சினையால் தங்கள் நிறுவனத்திற்கான எரிவாயுவை இறக்குமதி செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், சந்தையில் தற்போது லாவ் எரிவாயு இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதனால், நாடளாவிய ரீதியில் எரிவாயு தட்டுப்பாடு உக்கிரமடைந்துள்ளது.

**எரிபொருள் தட்டுப்பாடு**

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு தொடர்ந்து நிலவுகின்றது. கப்பல்களிலிருந்து எரிபொருள் தரையிறக்கப்படுவதாகக் கூறினாலும் நாட்டின் பல பகுதிகளிலும் எரிபொருள் இல்லை என்ற பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளதுடன், மக்களுக்கு வரிசை வரிசையாக காத்திருந்தனர்.

நாட்டில் தற்போது எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளபோதிலும் அதிக விலை கொடுத்தும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு முடியாத சூழ்நிலையே இருக்கின்றன.

இரவு பகலாக வரிசையில் காத்திருந்தே எரிபொருளை பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளதால் சில நேரங்களில் எரிபொருள் நிலையங்களுக்கு வரும் எரிபொருட்கள் குறிப்பிட்ட மணித்தியாலத்திற்குள்ளேயே நிறைவடைந்து விடுகின்றன. இதனால், அங்கு மீண்டும் எரிபொருள் வரும் வரை மக்கள் வரிசையில் இரவு பகலாக காத்திருக்கும் சூழ்நிலையே காணப்படுகின்றன.

நான்கு நாட்களுக்கு முன்னர் துறைமுகத்திற்கு வந்த 20 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் மற்றும் 20 ஆயிரம் விமானங்களுக்கான எரிபொருள் அடங்கிய கப்பலுக்கு டொலர் செலுத்த முடியாதமையினால் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன. இவற்றுக்கு ஒரு நாளைக்கு தாமத கட்டணமாக 19 ஆயிரம் டொலரை செலுத்த வேண்டியுள்ளதாகவும் கூறப்படுகின்றன.

இதேவேளை, ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் மற்றும் 60 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலும் எதிர்வரும் 10 நாட்களில் கிடைக்கவுள்ளதாகவும் இதனால், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது எனவும் பெற்றோலியக் கூட்டுத்தானத்தின் தலைவர் தெரிவித்தார்.

ஆனால், நாட்டில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு நிற்கும் மக்கள் வரிசைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இறக்குமதி செய்யும் எரிபொருளை விநியோகிப்பதற்கு எடுக்கும் காலதாமதமே நாட்டில் தொடர்ந்தும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட முக்கிய காரணமாகியுள்ளது.

நாடளாவிய ரீதியில் நாளுக்கு நாள் பல எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் இல்லை என்ற அறிவித்தல்கள் வைக்கப்படுவதால், வாகனங்களும் மக்களும் நீர், ஆகாரம் இன்றியும் தூக்கமின்றியும் பல மணிநேரமாக வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

**பால்மா தட்டுப்பாடு**

டொலர் நெருக்கடியால் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களடங்கிய கொள்கலன்களை விடுவிக்க முடியாதமையினால் சந்தையில் மீண்டும் பால்மாவிற்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சில இடங்களில் பால்மாவிற்கான விலைகளை அதிகரிக்கும் நோக்குடன் பதுக்கி வைக்கப்படுவதனாலும் தட்டுப்பாடுகள் மேலும் உக்கிரமடைந்துள்ளன.

இதேவேளை, டொலர் நெருக்கடியால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் எதிர்பாராத விதத்தில் அதிகரித்துள்ளன. விலை அதிகரிப்பினால் பொருட்களை பதுக்கிவைக்கும் நிலைமை ஏற்படும்போது பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் ஏற்படும் அபாயமுள்ளதாக இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்கள் விடுவிப்பதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கலாம் எனவும் அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதி விற்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

**பேக்கரி உற்பத்தி நுகர்வோரின் எண்ணிக்கை வீழ்ச்சி**

பேக்கரி உற்பத்திகளுக்கான கோதுமை மா உள்ளிட்ட மூலப்பொருட்களின் விலையேற்றம், எரிபொருள் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாட்டால் நாடுமுழுவதும் ஆயிரம் பேக்கரிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன், பேக்கரி உற்பத்திப் பொருட்களை நுகர்வோரின் எண்ணிக்கை 30 வீதம் குறைந்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் என்.கே.ஜயவர்தன 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு தற்போது சந்தித்துவரும் பாரிய பொருளாதாரப் பிரச்சினையால் பல தொழில் துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், பேக்கரி உற்பத்தித் தொழிலும் மிக மோசமான பாதிப்பை சந்தித்துள்ளது.

பேக்கரி உற்பத்திப் பொருட்களுக்குத் தேவையான கோதுமை மா உள்ளிட்ட மூலப் பொருட்களுக்கான விலை அதிகரித்துள்ளதுடன், தற்போது எரிபொருள் விலையேற்றமும் தட்டுப்பாடும் நிலவுகின்றன.

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் பல மணிநேரம் வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பேக்கரி உற்பத்திகளுக்குத் தேவையான பெருந்தொகை எரிபொருளை நாம் வரிசையில் நின்று பெற்றுகொள்ள முடியுமா?

இவ்வாறான சூழ்நிலையிலேயே பேக்கரி உற்பத்திகளுக்கான விலைகள் அதிகரிக்கப் பட்டுள்ளன. தற்போதைய நிலையில் பாண் ஒன்றின் விலை 110 தொடக்கம் 130 ரூபாவாக விற்கப்படுகிறது.

மக்களிடம் எமது உற்பத்திப் பொருட்களுக்கான தேவை இருக்கின்றது. கொள்வனவு செய்துகொண்டுதான் இருக்கின்றனர். எனினும், மட்டுப்படுத்திய அளவிலேயே கொள்வனவு செய்கின்றனர்.

இதனால் நுகர்வோரின் எண்ணிக்கை 30 வீதம் குறைந்துள்ளது. அத்தோடு நாடுமுழுவதும் ஆயிரம் பேக்கரிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இந்நிலை தொடருமாயின் பேக்கரி கைத்தொழிலை கைவிடவேண்டிய சூழ்நிலையும் ஏற்படலாம் - என்றார்.

**இரு எரிவாயு கப்பல்கள் 11 நாட்களாக துறைமுகத்தில் தேக்கம்**

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடியால் மூவாயிரத்து 500 மெட்ரிக் தொன் எரிபொருள் ஏற்றிவந்த இரண்டு கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் கடந்த 11 நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு தேவையான டொலர் கையிருப்பில் இன்மையால் குறித்த கப்பல்கள் இரண்டும் கொழும்பு துறைமுகப் பகுதியில் தரித்து நிற்பதாக லிட்ரோ நிறுவனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலுக்கு நாளொன்றுக்கு 18 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலுத்தவேண்டிவரும் என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி கப்பல்கள் இரண்டுக்கும் 11 நாட்களுக்கு 3,96,000 அமெரிக்க டொலர் செலுத்தவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

# மலையக தமிழர் அபிலாஷைகள் ஆவணம் ஜப்பானிய தூதுவரிடம் கையளிப்பு

மலையக தமிழர் அபிலாஷைகள் ஆவணம் ஜப்பானிய தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷியிடம், நேற்று தமிழ் முற்போக்கு கூட்டணியினால் கையளிக்கப்பட்டது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேஷன் மற்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிஷூகோஷூ ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (16) இடம்பெற்றது. இந்த சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவர் பழனி திகாம்பரம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வி. இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போதே இந்த ஆவணம் கையளிக்கப்பட்டுள்ளது.

மலையக தமிழர் அபிலாஷைகள் ஆவணத்துடன், மலையக கல்வி தொடர்பான கோரிக்கைகளும் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஜப்பானிய அரசையும், மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஜப்பானிய தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷி, அரசியல் துறை மற்றும் முதலாம் செயலாளர் தகேசி ஓசாகி, அரசியல் துறை ஆய்வாளர் கநா மொரிவகி ஆகியோர் பங்குபற்றினர்.



மலையக தமிழர் எதிர்நோக்கும் சவால்கள், இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம், ஐ.நா. மனித உரிமை ஆணையகம் பற்றி கலந்துரையாடப்பட்டது. அதை தொடர்ந்து, வடக்கு மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களை பற்றியும் ஏனைய சமூகங்களை பற்றியும் ஓரளவு அறிந்துள்ளதாகவும், இனிமேல் மலைநாட்டு தமிழ் மக்களை பற்றி மென்மேலும் அறியவும், அவர்களுக்கு உதவிடவும் ஜப்பானிய அரசும், மக்களும் விரும்புவதாக ஜப்பானிய தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷி, மனோ கணேசன் எம்.பியிடம் கூறியுள்ளார்.

இலங்கையில் வாழும் நான்கு பிரதான இனக்குழுக்களில், மலையக தமிழரையும் தனித்துவம் கொண்ட ஒரு இனக்குழுவினராக தாம் இனிமேல் குறித்துக்கொள்வதாகவும், ஜப்பானிய தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோரிடம் உறுதியளித்தார்.

ஐ.நா. மனித உரிமை அறிக்கையில் மலையகம் பற்றி இன்னமும் முறையாக போதியளவு குறிப்பிடப்படாமை பற்றியும் தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷி வினவினார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி, தற்போது ஒரு அரசியல் தலைமையாக செயற்பட ஆரம்பித்துள்ளது. இந்த படிவரிசையில் நாம் மலையக விவகாரங்களை படிப்படியாக சர்வதேச மயப்படுத்தி வருகிறோம். அந்த அடிப்படையிலேயே மலையக தமிழர் அபிலாஷைகள் ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படியே இந்த சந்திப்பு நிகழ்கிறது. ஏனைய சர்வதேச நட்பு நாடுகளின் பிரதிநிதிகளையும், ஐ.நா. வதிவிட பிரதிநிதியையும் சந்திக்க நாம் தீர்மானித்துள்ளோம் என தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷிக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

ஜப்பான் எப்போதுமே இலங்கை மக்களால் பெரிதும் விரும்பப்படும் நட்பு நாடு என்ற முறையில் எமது மக்கள் தொடர்பில் ஜப்பானிய தூதுவரின் கருத்துகளை தாம் முழுமனதுடன் வரவேற்றதாகவும், அதேவேளை இலங்கை அரசுடன் இருக்கின்ற நட்புறவை பயன்படுத்தி, மலையக மக்களின் விவகாரங்கள் தொடர்பில் அக்கறையை அதிகரிக்கும்படி இலங்கை அரசை வலியுறுத்தும்படி தாம் ஜப்பானை கேட்டுக்கொண்டதாகவும், மலையக மக்கள் தொடர்பில் கல்வி வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கும்படி ஜப்பானிய அரசை கோரியதாகவும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்கு கூறியுள்ளார்.

# ஃபுடெக்ஸ் ஜப்பானிய கண்காட்சியில் 'சிலோன் டீ'

ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதரகம் இலங்கை தேயிலை சபையின் உதவியுடன் ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற ஃபுடெக்ஸ் கண்காட்சியில் 1400 க்கும் மேற்பட்ட உணவு தொடர்பான கூடங்களைக் கொண்டிருந்த சிலோன் டீ யை காட்சிப்படுத்தியது.

ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் சஞ்சீவ் குணசேகர 25இற்கும் மேற்பட்ட நாடுகளின் தூதுவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஃபுடெக்ஸ் ஜப்பான் திறப்பு விழாவில் பங்கேற்று இலங்கை தேயிலை அரங்கைத் திறந்து வைத்தார். இந்தக் கண்காட்சியில் இடம்பெற்ற விருந்தினர்களில், உலகெங்கிலும் 1700 உணவகங்களை இயக்கும் எம்.ஓ.எஸ். பேர்கர் பிரன்சைஸின் கொள்வனவு பொது முகாமையாளரும் இணைந்து கொண்டார்.

இலங்கைக் கூடத்தில் டில்மா டீ, ஜோர்ஜ் ஸ்டூவர்ட்ஸ் டீ, நெல்சன் - ரான்ஃபுர் டீ, ஜெஃ பர்ஜி பிரதர்ஸ் - ஜெஃப் டீ, செயம் டீ மற்றும் இலங்கை தேயிலை சபையின் பல கூடங்கள் அடங்கியிருந்தன. அனைத்து கண்காட்சியாளர்களும் தமது பல தயாரிப்புகளின் நேரடி ஊடாடும் விளக்கக்காட்சிகளை வழங்கினர். பல வணிகக் கூட்டங்கள் நடைபெற்றதுடன், நான்கு நாட்களில் கண்காட்சியின் போது, எதிர்கால சில்லறை சங்கிலிகள், உணவகங்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து 600 க்கும் மேற்பட்ட விசாரணைக் கோரல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

ஜப்பானில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊழியர்களும் ஜப்பானிய தன்னார்வலர்களும் இணைந்து நடத்திய தேயிலை சபையின் கூடம் தொடர்ச்சியான தேநீர் ருசிக்கும் வாய்ப்புகளை வழங்கியதுடன், பார்வையாளர்களுக்கு சிலோன் டீ குறித்த கல்வியை கற்பித்தது. முதன்மைச் செயலாளர் (வர்த்தகம்) கபில ஜே. குமார நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

# கலாஓயா பாலத்துக்குள் வீழ்ந்து வனஜீவி உத்தியோகத்தர் பலி

**(ரஸீன் ரஸ்மின்)**

வனஜீவராசிகள் திணைக்களத்தின் எழுவங்குளம் வில்பத்து நுழைவாயிலில் கடமையில் இருந்த வனவிலங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நேற்று முன்தினம் (15) எலுவன்குளம் பாலத்திற்குள் (கலாஓயா பாலம்) வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கல்கமுவ பகுதியைச் சேர்ந்த எச்.எம்.பி. ஏ. ரத்நாயக்க ( வயது 33) வனவிலங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

எழுவங்குளம் வில்பத்து நுழைவாயிலில் கடமையில் இருந்த வனவிலங்கு பாதுகாப்பு உத்தியோகத்தரான குறித்த நபர் நேற்று புத்தளத்திலிருந்து எலுவன்குளம் ஊடாகச் செல்லும் கலாஓயா பாலத்திற்கு அருகே கடமையில் இருந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், பாலத்திற்கு அருகே கடமையில் இருந்த குறித்த நபர், திடீரென கீழே மயக்கமுற்ற நிலையில் பாலத்திற்கு கீழே வீழ்ந்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

இதனை பார்த்த மற்றுமொரு உத்தியோகத்தர் உடனடியாக அந்த இடத்திற்கு வந்து பார்த்த போது அங்கு குறித்த உத்தியோகத்தரின் இரண்டு பாதணிகள் மாத்திரமே இருந்துள்ளதாகவும், அந்த உத்தியோகத்தர் நீருக்குள் வீழ்ந்து காணாமல் போயுள்ளதாகவும் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக வன்னாத்தவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சம்பவம் பற்றி வன்னாத்தவில்லு பொலிஸாருக்கு தெரியப்படுத்திய வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், வில்பத்து நுழைவாயிலில் பாதுகாப்புக்காக இருக்கும் அங்கிருந்த கடற்படையினரின் உதவியைப் பெற்று நீருக்குள் வீழ்ந்து காணாமல் போன வனவிலங்கு பாதுகாப்பு உத்தியோகத்தரை தேடியுள்ளனர்.

இந்த நிலையில், சில மணி நேரத்தில் நிலத்தில் இருந்து 15 அடி ஆழத்திற்கு கீழ் பகுதியில் இருந்து குறித்த உத்தியோகத்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்ட பதில் நீதவான் எம்.எம். இக்பால், வைத்தியசாலைக்கு சென்று குறித்த சடலத்தை பார்வையிட்டதுடன், சம்பவ இடத்திலும் கள விசாரணைகளையும் மேற்கொண்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் வன்னாத்தவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்தியா எப்போதும் ஒத்துழைப்பு வழங்கும்

## நிதி அமைச்சரிடம் பிரதமர் மோடி தெரிவிப்பு



இக்கட்டான சூழ்நிலைகளில் இந்தியா எப்போதும் இலங்கைக்கு ஒத்துழைப்பாக செயற்படுமென இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவை நேற்று (16) சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்கு இந்தியா வழங்கிய அனைத்து உதவிகளுக்கும் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ இதன்போது நன்றி தெரிவித்துள்ளார். மேலும், நெருங்கிய நண்பரான இலங்கையுடன் இந்தியா எப்போதும் இருக்குமென்று அமைச்சரிடம் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

# உள்நாட்டு சேலைன் போத்தல்கள் சந்தைக்கு

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால், முதற்தடவையாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சேலைன் (Saline) போத்தல்கள் நேற்று முன்தினம் (15) முதல் உள்நாட்டு சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

நாட்டுக்கு தேவையான சேலைன் போத்தல்களில் 28 சதவீதம் தற்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாகவும், எதிர்காலத்தில் நாட்டுக்கு தேவையான அனைத்து சேலைன் போத்தல்களையும் நாட்டிலேயே உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

# நெருக்கடியை தீர்த்து....

அமைச்சரவை, நாடாளுமன்றம் மற்றும் அரச ஊழியர்களிடமும் நான் கேட்டுக்கொள்வது, எமது பிள்ளைகளுக்கு சிறந்த நாட்டை வழங்குவதற்காக, எம்மிடம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ள நாம் ஒரு குழுவாக இலட்சியத்துடனும் தியாகத்துடனும் செயற்படுவதையே ஆகும்.

உங்கள் அழைப்பின் பேரிலேயே நான் அரசியலுக்கு வந்தேன். நீங்கள் என் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளீர்கள். அந்த நம்பிக்கையை பாதிக்கும் வகையில் செயற்படாது, அர்ப்பணிப்புடன் பாதுகாப்பேன்

இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது ,

இன்று ஒரு சவாலான நேரத்தில் நான் உங்களிடம் உரையாற்றுகிறேன்.

உங்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வை நான் நன்கு அறிவேன். எரிவாயு தட்டுப்பாடு அதே போன்று, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு போன்ற பிரச்சினைகளை நான் நன்கு அறிவேன். கடந்த இரண்டு மாதங்களாக பொதுமக்கள் அனுபவித்த பல இன்னல்கள் குறித்தும் நான் நன்றாக உணர்ந்துள்ளேன். அதற்காக எங்களால் செய்ய முடிந்த அனைத்தையும் நாம் செய்தாலும், எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் இந்த நிலைமை தொடரும் என்பதை நான் அறிவேன்.

நான் செய்யும் செயல்களுக்கு நான் பொறுப்பேற்கிறேன். பொதுமக்கள் அனுபவிக்கும் ஒரு சில சிக்கலான வாழ்க்கை முறைகளுக்கு தீர்வு காண இன்று நான் கடுமையான முடிவுகளை எடுக்க உறுதிபூண்டுள்ளேன். அதற்கு உதவ தேசிய பொருளாதார சபையையும், அதற்கு ஒத்துழைப்பு வழங்க ஒரு ஆலோசனைக் குழுவையும் நியமித்தேன். இதன் மூலம், நான் எடுக்கும் முடிவுகள் செயற்படுத்தப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்கவும் நடவடிக்கை எடுப்பேன். எனவே, மக்களுக்காக நான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைக்குமாறு நான் உங்களை முதலில் கேட்டுக்கொள்கிறேன்.

நான் மக்களின் சிரமங்களை நன்கு அறிந்த ஒருவர். நாங்கள் எதிர்கொண்ட கொடூரமான பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் முன்னணியில் இருந்த படைவீரர் மற்றும் யுத்தத்தில் சிக்கிய அப்பாவி பொதுமக்கள் எதிர்கொண்ட அனைத்து சிரமங்களையும் நன்கு புரிந்துகொண்டு அவற்றை முறையாக நிர்வகிக்க என்னால் முடிந்தது.

இன்றைய இக்கட்டான நிலைமை, நம் நாடு மட்டும் முகங்கொடுக்கும் ஒரு விடயமல்ல. முழு உலகமும் ஏதோ ஒரு வகையில் ஒரு சிக்கலான சூழ்நிலையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன. கொவிட் நோய்த் தொற்றினால் அதிகரித்த கப்பல் கட்டணங்கள், பொருட்களின் விலை அதிகரித்தல் மற்றும் சில பொருட்களின் தட்டுப்பாடு ஆகிய அனைத்தும் நம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை. ஆனாலும் நாம் மக்களின் பக்கம் நின்று நிவாரண நடைமுறைகளைப் பின்பற்றுகிறோம்.

இந்த நெருக்கடி ஒரு போதும் என்னால் உருவாக்கப்பட்டதொன்று அல்ல. அன்று இந்த நெருக்கடியை உருவாக்குவதற்கு காரணமானவர்கள் இன்று மக்கள் முன்னிலையில் அரசாங்கத்தை விமர்சித்து வரும் நிலையில், இந்த நெருக்கடியை விரைவில் தீர்த்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவே நான் முயற்சிக்கிறேன்.

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில், ஒரு நாட்டின் அரசியல்வாதிகளினதும் புத்திஜீவிகளினதும் பொறுப்பு ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்கு கூட்டாக தீர்வு காண்பதேயாகும்.

இன்றைய பிரச்சினைகளுக்கு மூலகாரணம் நமது அந்நிய செலாவணி நெருக்கடி ஆகும்.

ரூபாய் நெகிழ்வுடன் இயங்குவதற்கு இடமளிக்கப்பட முன்னர் இருந்த நிலைமையின் பிரகாரம், இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் ஏற்றுமதி வருமானம் 12 பில்லியன் டொலர்கள் ஆகும். கடந்த இரண்டு மாத கால தரவுகளின்படி, இந்த ஆண்டு 22 பில்லியன் டொலர்கள் இறக்குமதி செலவை நாம் ஏற்க வேண்டியுள்ளது. அதன்படி, 10 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகப் பற்றாக்குறை உருவாகும்.

அண்மைக்கால தரவுகளின்படி, இந்த ஆண்டு சுற்றுலாத்துறையிலிருந்தும் அதேபோன்று தகவல் தொழில்நுட்பம் போன்ற சேவை ஏற்றுமதியில் இருந்தும் சுமார் 03 பில்லியன் டொலர்கள் கிடைக்கக்கூடியதோடு, வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 02 பில்லியன் டொலர்கள் கிடைக்கும். அதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை 05 பில்லியன் டொலர்களாக இருக்கும்.

இதற்கிடையில், இந்த ஆண்டு 6.9 பில்லியன் டொலர் கடன் தவணைகள் மற்றும் இறையாண்மை பத்திரங்களுக்கு செலுத்தப்பட வேண்டும். அப்போது 11.9 பில்லியன் டொலர் பற்றாக்குறை ஏற்படும்.

ஏனைய கடன் உதவிகள் மற்றும் முதலீடுகளாக 2.5 பில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வகையில் அந்நியச் செலாவணியில் மொத்தம் 9.4 பில்லியன் டொலர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

ஆனால் ரூபா நெகிழ்வின் பின்னர் ஏற்றுமதி வருமானம் 13 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இறக்குமதி செலவை 22 பில்லியன் டொலரில் இருந்து 20 பில்லியன் டொலர்கள் வரை குறைத்துக் கொள்ளவும் முடியும். அப்படியானால், வர்த்தக பற்றாக்குறையை 07 பில்லியன் டொலர்கள் வரை குறைக்க முடியும். அதைத்தான் நாம் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று, சேவை ஏற்றுமதியின் மூலம் 04 பில்லியன் டொலர்கள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 05 பில்லியன் டொலர்களையும் எதிர்பார்க்கலாம். அதன்படி, நமது வர்த்தக பற்றாக்குறை 2.4 பில்லியன் டொலர்கள் ஆகும்.

இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், நமது அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கவும் நாம் செயற்பட வேண்டும்.

இதற்காக, சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் எங்களது கடன் தவணையை திருப்பிச் செலுத்துவது குறித்து நாம் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம். இதனை எமது நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் புதிய பொறிமுறையின் மூலம் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றது. சர்வதேச நாணய நிதியத்துடனான நேற்றைய கலந்துரையாடலும் இந்த நோக்கத்துடனேயே இடம்பெற்றது.

அந்த கலந்துரையாடல் மூலம் நாம் எதிர்பார்ப்பது, ஒரு வருடத்துக்கு நாங்கள் செலுத்த வேண்டிய கடன் தவணைகள், இறையாண்மை பத்திரங்கள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதாகும். சர்வதேச நாணய நிதியத்துடனான எனது கலந்துரையாடலுக்குப் பிறகு, அனுகூலங்கள், பிரதிகூலங்களை ஆய்வுசெய்து அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு நான் முடிவு செய்தேன்.

கடந்த காலத்தில் நான் எடுத்த சில முடிவுகளால் இறக்குமதிச் செலவை பெருமளவு கட்டுப்படுத்த முடிந்தது. இந்த பிரச்சினையை முன்கூட்டியே கண்டுகொண்டதால் இரண்டு ஆண்டுகளுக்கு முன், வாகனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டோம். மேலும், உள்நாட்டில் நமது தேவைகளை பூர்த்தி செய்யும் கைத்தொழில்களை ஊக்குவித்தோம். அதேபோன்று, பல அத்தியாவசியமற்ற உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டு, அந்த பயிர்களை நம் நாட்டில் பயிரிடுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். அவற்றின் வெற்றிகரமான முடிவுகளை இப்போது காண்கிறோம்.இறக்குமதிச் செலவைக் கட்டுப்படுத்துவதில் நாம் எதிர்கொள்ளும் மிகக் கடுமையான பிரச்சினை, உலகச் சந்தையில் எண்ணெய் விலைகள் வேகமாக அதிகரிப்பதாகும். சராசரியாக, நமது இறக்குமதிச் செலவில் 20 சதவீதத்திற்கும் அதிகமாக எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்படுகிறது. கடந்த சில மாதங்களில் மட்டும் உலக சந்தையில் எரிபொருளின் விலை இருமடங்காக அதிகரித்துள்ளது. இதனால்தான் நம் நாட்டிலும் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. நம் நாட்டில் வாகனங்களுக்கு மட்டுமின்றி மின்சார உற்பத்திக்கும் எரிபொருள் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

அதனால்தான், முடிந்தவரை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களைப் பயன்படுத்த நான் தொடர்ந்தும் கலந்துரையாடி குறித்த நிறுவனங்களை ஊக்கப்படுத்தினேன்.

எனவே எரிபொருள் மற்றும் மின்சாரப் பாவனையை இயன்றவரை கட்டுப்படுத்துவதன் மூலம் மக்களும் இந்த நேரத்தில் நாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும். இந்தக் கடினமான நேரத்தில் அந்தப் பொறுப்பை நீங்கள் புரிந்துகொண்டு செயற்படுத்துவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

கொவிட் தொற்றுநோய் காரணமாக வீழ்ச்சியடைந்த சுற்றுலா கைத்தொழில் மீண்டும் எழுச்சிபெற்று வருகின்றது. கடந்த இரண்டு மாதங்களில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அதேபோன்று, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் துரிதப்படுத்துவதால், இத்துறைகள் மூலம் நாட்டுக்கு வரும் வருமானம் அதிகரித்து வருகிறது.

நாம் வரலாற்றில் பலமுறை வீழ்ந்து, எழுந்த தேசம் ஆகும். அந்நிய படையெடுப்பு, பெரும் பஞ்சம், இயற்கை அனர்த்தங்கள், பயங்கரவாத அச்சுறுத்தல்கள் போன்றவற்றை நாம் எதிர்கொண்டு அதிலிருந்து மீண்டுள்ளோம். கடந்த கொரோனா நோய்த் தொற்றை நாம் எதிர்கொண்ட விதம் சர்வதேச அமைப்புகளால் கூட பாராட்டப்பட்டது. தீர்வுகளை நடைமுறைப்படுத்தும்போது சில காலம் சிரமங்களைச் சந்திக்க நேரிடும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, நீங்கள் அனைவரும் தைரியத்தை இழக்காமல் இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஒரு தேசமாக ஒன்றிணையுமாறு உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் என்னிடம் பாதுகாப்பு, ஒழுக்கம், நவீனமயமான அபிவிருத்தி அடைந்த நாடு, குழந்தைகளுக்கு சிறந்த கல்வி ஆகியவற்றையே கேட்டீர்கள். எனது பதவிக்காலத்தில் ஏறக்குறைய இரண்டரை வருடங்கள் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் தொற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டது. ஆரோக்கியமான தாய் நாட்டில் எனது எதிர்கால பதவிக்காலத்தை அந்த அடிப்படை இலக்குகளுக்காக அர்ப்பணிப்பேன்.

அமைச்சரவை, நாடாளுமன்றம் மற்றும் அரச ஊழியர்களிடமும் நான் கேட்டுக்கொள்வது, எமது பிள்ளைகளுக்கு சிறந்த நாட்டை வழங்குவதற்காக, எம்மிடம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ள நாம் ஒரு குழுவாக இலட்சியத்துடனும் தியாகத்துடனும் செயற்படுவதையே ஆகும்.

உங்கள் அழைப்பின் பேரிலேயே நான் அரசியலுக்கு வந்தேன். நீங்கள் என் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளீர்கள். அந்த நம்பிக்கையை பாதிக்கும் வகையில் செயற்படாது, அர்ப்பணிப்புடன் பாதுகாப்பேன் - என்றார் ஜனாதிபதி

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மார்ச் 17ஆம் திகதி, வியாழக்கிழமை

# என்றுமில்லாத நெருக்கடி நிலை!

பொருளாதார நெருக்கடியினால் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது.

அதிதீவிர தேசியவாத அரசாங்கத்தின் கொள்கைகளில் ஏற்பட்ட தோல்விகள் காரணமாக மக்கள் சீற்றமடைந்துள்ளமை ஆங்காங்கே வெளிப்பட்டுள்ளது.

பெற்றோலும், டீசலும் தற்போது தட்டுப்பாடான பொருட்களாக மாறியுள்ளன. அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பினை சொல்லி மாளாது. துயரத்தின் விளிம்பு நிலையில் காணப்படும் நாட்டின் அறிகுறிகள் இவை. ஆனால், நாட்டில் முந்தைய பிரச்சினைகளுக்கான காரணங்களிலிருந்து வேறுபட்ட காரணங்களாக இவை காணப்படுகின்றன.

கடந்தகால வன்முறைகளுக்கு மனித உரிமை மீறல்கள் முதல் ஊடக சுதந்திரத்தின் மீதான ஒடுக்குமுறை, மூன்று தசாப்தகால போரின் கோபம் எனப் பல காரணங்கள் காணப்பட்டன. மக்கள் போதுமான அளவிற்கு கஷ்டங்களை அனுபவித்துவிட்டார்கள். அரசுக்குத் திறமையின்மை என்பது வெளிப்படையாகத் தெரிந்துவிட்டது.

அதிகரித்துவரும் தட்டுப்பாடுகள் மற்றும் அதிகரிக்கும் விலைகளால் மார்ச் மாத இயல்பு நிலைமை பாதிக்கப்பட்டுள்ளது. சமையல் எரிவாயு நெருக்கடி காரணமாக நூற்றுக்கணக்கான வெதுப்பகங்கள் மூடப்படவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. பால்பொருட்கள் மிகவும் அதிக விலையானவையாக மாறியுள்ளன. இதன் காரணமாக சிறு குழந்தைகளைக்கொண்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மருந்தகங்களில் மருந்துகளுக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது.

தொடர்ச்சியான நீண்டநேர மின்துண்டிப்புகள் நாட்டை இருளில் மூழ்கடிக்கின்றன. ஏற்கனவே காணப்படும் துயரங்களை இது மேலும் அதிகரிக்கின்றது. சமூக ஊடகங்களில் அரசாங்கத்தைக் கேலி, கிண்டல் செய்வதையும், அரசுக்கு எதிரான விமர்சனங்களையும் தடுப்பதற்கான முயற்சிகள் பாதுகாப்புத் தரப்பில் எடுக்கப்படுவது பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த புத்திஜீவிகள் அமைப்பான ‘வெரிட்டே ரிசேர்ச்’ சமீபத்தில் ஆய்வொன்றை மேற்கொண்டது. அந்த ஆய்வில் கலந்துகொண்டவர்களில் பத்து வீதமானவர்கள் மாத்திரம் ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு ஆதரவாக கருத்து வெளியிட்டுள்ளனர். 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ பெற்ற வாக்குகள் மற்றும் ஆதரவுடன் ஒப்பிடும்போது இது பாரிய மாற்றமாகும்.


கடந்த வாரம் நிதியமைச்சு இறக்குமதி செய்வதற்கு தடைவிதிக்கப்பட்ட 367 பொருட்களின் பட்டியலை வெளியிட்டது. அந்தப் பட்டியலில் வெளிநாட்டுப் பொருட்கள் குடிவகைகள், அழகுசாதனப் பொருட்கள், ஆடைகள் போன்றவையும் காணப்பட்டன. கடந்த செப்டெம்பரில் 623 பொருட்களுக்குத் தடைவிதிக்கப்பட்ட நிலையிலேயே தற்போது இந்தப் பட்டியல் வெளியாகியுள்ளது. இவற்றில் இலத்திரனியல் பொருட்களும் காணப்படுகின்றன.

மத்திய வங்கி பெப்ரவரி மாதத்தில் வெளியிட்ட புள்ளிவிபரங்கள் இந்த வகைப் பொருட்களை தடைசெய்ய வேண்டியதற்கான தேவையை வெளிப்படுத்தும் விதத்தில் காணப்பட்டன. உத்தியோகபூர்வ கையிருப்பு 2.31 பில்லியனாக வீழ்ச்சியடைந்திருந்தது. தங்கக் கையிருப்புகள் 98 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டன.

கடினமான காலங்கள் இனிமேல்தான் வரப்போகின்றன என சர்வதேச நாணய நிதியம் ஏற்கனவே ராஜபக்ஷ அரசாங்கத்தை எச்சரித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதற்கு தயங்கும் அரசாங்கம் இதுவரை உள்நாட்டில் உருவாக்கப்பட்ட திட்டங்களுக்காக சீனா, இந்தியா போன்ற நாடுகளிடம் நிதி உதவியைக் கோரியுள்ளது.

கடந்த 56 வருடங்களில் சர்வதேச நாணய நிதியம் 16 தடவைகள் இலங்கைக்கு கைகொடுத்துள்ளது. இப்போதும் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதைத் தவிர, வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. கொரோனாவால் சரிந்துகொண்டிருந்த உலகப் பொருளாதாரம் இப்போது உக்ரைன் சம்பவத்துடன் மோசமாகிக்கொண்டிருக்கிறது. அதில் இலங்கையும் சிக்கிக்கொண்டிருக்கிறது.

என்னதான் செய்தாலும் நாட்டில் இப்போதுள்ள நெருக்கடி தொடரும். அதேசமயம், அரசு மீதான மக்களின் விசனமும் தொடரவே போகின்றது. உடனடியாக ஏதாவது அதிசயம் நடந்தாலன்றி இலங்கையை ஆபத்திலிருந்து காப்பாற்றிவிட முடியாது. இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதளவுக்கு மோசமான நெருக்கடியே இப்போது ஏற்பட்டுள்ளதை ஆட்சியாளர்கள் உணர்ந்திருக்கிறார்களா ?



# இயந்திரக் கற்றல் எப்படி நடைபெறுகிறது?

இன்றைய கணினித் தொழில்நுட்ப வளர்ச்சியில் எங்கும், எதிலும் கேட்கக்கூடிய ஒரு சொல் ‘இயந்திரக் கற்றல்’ (machine learning). இயந்திரக் கற்றல் என்றால் இயந்திரமே தானாகக் கற்றுக்கொள்ளுமா என்ற கேள்வி பலருக்கும் எழலாம்.

மனிதர்கள் ஒரு செயலைத் திரும்பத்திரும்பச் செய்துபார்த்து, அதிலுள்ள தவறுகளைத் திருத்திக்கொண்டு அந்தச் செயலை மிகச் சரியாகச் செய்ய ஆரம்பிக்கிறோம். அதுபோல், நம்முடைய இயந்திரத்துக்கும், கணினிக்கும் நாம் கற்றுக்கொடுத்து, அதனடிப்படையில் நாம் கேட்கும் கேள்விக்கு அவற்றைச் சரியான பதிலளிக்க வைப்பதுதான் இயந்திரக் கற்றல்.

நாம் பிறக்கும்போது நமக்கு எந்தச் செயலையும் செய்யத் தெரியாது. காலம் செல்லச்செல்ல பிறரின் உதவியுடன் சில செயல்களைச் செய்ய ஆரம்பிப்போம். முதலில் நாம் கால், கைகளின் உதவியுடன் நடக்க ஆரம்பிப்போம். பிறகு, யாருடைய உதவியுமில்லாமல் நடக்க ஆரம்பிப்போம். நாம் எவ்வாறு அனுபவத்தோடு வளர்கிறோமோ, அதேபோல் கணினிக்கும், இயந்திரத்துக்கும் கற்றுக்கொடுத்து, அந்த அனுபவங்களின் அடிப்படையில் அதனை வேலைசெய்ய வைப்பதே இயந்திரக் கற்றல். சுருக்கமாகக் கூறினால், சேமித்து வைத்திருக்கும் தகவலின் அடிப்படையில் நாம் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறுவதுதான் இயந்திரக் கற்றல். இருக்கிற தகவல் என்பதுதான் இயந்திரத்தின் செயலாக்கத் தரவு. கேள்விகளுக்குப் பதில் தருவதுதான் முன்கணித்தல் என்பதாகும்.

உதாரணமாக, கணினிக்கு முதலில் சில படங்களைக் காண்பித்துப் பயிற்சி கொடுக்க வேண்டும். இயந்திரமானது அந்தப் படத்தில் உள்ள தனிச்சிறப்புகளையும், மாதிரியையும் சேமித்து வைத்து, மறுபடியும் நாம் அந்தப் படத்தைக் காண்பிக்கும்போது சேமித்து வைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் அதைப் பற்றிய தெளிவான பதிலை அளிக்கும். எடுத்துக்காட்டாக, மனிதர்கள், நாய்களின் படங்களை இயந்திரத்துக்குக் கற்றுக்கொடுத்துவிட்டோமானால், அவற்றில் உள்ள தனிச்சிறப்புகள் (உதாரணமாக, நாய்க்கு வால் இருக்கும், மனிதர்களுக்கு நீண்ட கால்கள் இருக்கும்) என்கிற தகவல்களைச் சேமித்து வைத்துக்கொள்ளும். இதனடிப்படையில், நாம் மீண்டும் அந்தப் படங்களைக் காண்பிக்கும்போது இது நாய், இது மனிதர் என்று அதன் தனிச்சிறப்புகளின் அடிப்படையில் பதில் அளிக்கும்.

வலையொளியில் நீங்கள் ஒரு தகவலைத் தேடும்போது அதற்கு நிகரான தகவல்கள் ஓரமாக நிறைய வந்து நிற்கும். இது உங்கள் எண்ணத்துக்கு ஏற்றவாறு நீங்கள் இதைத்தான் தேடுகிறீர்கள் என்பதையும், உங்களுக்குப் பிடித்ததையும் தெளிவாக இணையம் காண்பிக்கும். இயந்திரக் கற்றலுக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு. கிணற்றைத் தோண்டத் தோண்ட நீர் ஊற்றெடுப்பதுபோல் நாம் படிக்கப் படிக்கத்தான் நமக்கு அறிவு வளரும். அதுபோல், இயந்திரத்துக்குக் கற்றுக்கொடுக்கக் கற்றுக்கொடுக்க மிகத் துல்லியமாக நமக்குத் தேவையான பதிலைத் தரவோ, செயலை ஆற்றவோ இயந்திரத்தால் இயலும்.

மனிதர்கள் செய்யும் வேலையை வெறும் நிரல்கள் (Programming) எழுதிக் கணினி மூலமாக செய்யவைப்பது இயந்திரக் கற்றல் ஆகாது. அதன் பெயர் தானியக்கம் (Automation). இதை இன்னும் எளிமையாகக் கூறலாம். வாகனம் ஓட்டுவது, ஒருவருடைய குரலைக் கேட்டே ஆளைக் கணிப்பது போன்றவையெல்லாம் ஒருவர் தன்னுடைய அனுபவ அறிவாலும், புத்திக்கூர்மையாலும் செய்யக்கூடியவை. இவற்றுக்கெல்லாம் நேரடியாக நிரல்கள் எழுதிக் கணினிக்குச் சொல்லித்தர முடியாது. அந்த அனுபவத்தையும், அறிவையும் கொடுத்துத்தான் நாம் கணினியைப் பழக்க வேண்டும்.

மனிதர்களைபோன்று கணினிகளை யோசிக்க வைத்து, முடிவுகளையும் அவற்றையே எடுக்க வைப்பது, அவ்வாறு எடுக்கப்படும் முடிவுகள் இயந்திரத்தனமாக அல்லாமல், அறிவின் அடிப்படையில் அமைவதற்கு என்னென்ன செய்யவேண்டும், அவ்வாறு யோசிக்க வைப்பது எவ்வாறு சாத்தியப்பட்டது, அதிலுள்ள வழிமுறைகள் என்ன, கோட்பாடுகள் என்னென்ன என்பது போன்ற அனைத்தையும் விளக்குவதே இயந்திரக் கற்றல் என்பதாகும். இயந்திரங்களுக்குக் கற்பிப்பது என்பது விலங்குகள் எவ்வாறு கற்கின்றன என்பதை அடிப்படையாக வைத்தே ஆராயப்பட்டது.

மனித சக்தியை மீறி வானியல், புவியியல் உள்ளிட்ட பல்வேறு அறிவியல் துறைகளிலும் பல்வேறு சோதனைகள் நடத்தப்படுகின்றன. அவை வெற்றிபெற வேண்டுமென்றால், ஏற்கனவே தோல்வியைத் தழுவிய முந்தைய சோதனை முடிவுகளை எடுத்து ஆராய்ந்து பார்த்தால்தான் சாத்தியமாகும். உதாரணத்துக்கு, மருத்துவத்துறையை எடுத்துக்கொண்டால், முன்பெல்லாம் பிரசவத்தின்போது பெண்களின் இறப்பு விகிதம் என்பது பாதிக்குப் பாதியாக இருந்தது. இதனைக் குறைப்பதற்கு பிரசவத்தின்போது இறந்த கோடிக்கணக்கான பெண்களின் ஆய்வறிக்கைகளை எடுத்துப் பார்க்க வேண்டியிருந்தது. அவற்றுள், ஒவ்வொரு பெண்ணும் ஏன் இறந்தார், எத்தனை பெண்கள் ஒரே வகையான காரணத்தால் இறந்திருக்கிறார்கள், எந்த வகையான காரணங்கள் இறப்புக்கு வழிவகுக்கின்றன என்பது போன்ற விடயங்களையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டும்.

இதெல்லாம் மனித சக்தியால் செய்ய முடியுமா? மனித சக்திக்கு அப்பாற்பட்ட செயல்தான் என்பது நிதர்சனமான உண்மை. ஆகவே, இதைச் செய்வதற்குக் கணினிகளைப் பழக்கி, ஒரே மாதிரியான அம்சங்கள் மற்றும் முறைகளில் இருக்கும் தரவுகளைக் கண்டுபிடிக்கின்றனர்.
பின்னர், அவற்றை மருத்துவ வல்லுநர்கள் பரிசீலித்து, இறப்புக்கு வழிவகுக்கும் காரணிகள் எவையென்று கண்டறிகின்றனர். இதனடிப்படையில்தான், வருகின்ற ஒவ்வொரு கர்ப்பிணியிடமும் இவற்றில் ஏதேனும் ஒன்று தென்பட்டால்கூட உடனே அறுவைசிகிச்சை செய்துவிடுகிறார்கள். ஆகவேதான், தற்போது பெரும் எண்ணிக்கையிலான பெண்களுக்கு அறுவைசிகிச்சை செய்யப்பட்டு, இறப்பு விகிதமும் முழுவதுமாகக் குறைந்துவிட்டது.

இதுபோன்ற பல செயல்பாடுகளுக்கு இயந்திரக் கற்றல் தொழில்நுட்பம் பயன்படுகிறது. எனினும், மனித அறிவை இயந்திரங்கள் மற்றும் கணினிகள் விஞ்சுவதால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்தும் எச்சரிக்கையாக இருக்கவேண்டியது அவசியம்.

**க.சண்முகம்,**
**பேராசிரியர்**

(நன்றி - தமிழ் இந்து)

## தவக்கால சிந்தனை

### மனிதரில் நம்பிக்கை வைப்போர் சபிக்கப்படுவர்; ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர்




மனிதரில் நம்பிக்கை வைப்போரும், வலுவற்ற மனிதரில் தம் வலிமையைக் காண்போரும் சபிக்கப்படுவர். அவர்கள் பாலைநிலத்துப் புதர்ச் செடிக்கு ஒப்பாவர். பருவ காலத்திலும் அவர்கள் பயனடையார். பாலை நிலத்தின் வறண்ட பகுதிகளிலும், யாரும் வாழா உவர் நிலத்திலுமே அவர்கள் குடியிருப்பர். ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர். ஆண்டவரே அவர்களது நம்பிக்கை. அவர்கள் நீர் அருகில் நடப்பட்ட மரத்துக்கு ஒப்பாவர். அது நீரோடையை நோக்கி வேர் விடுகின்றது.

வெப்பமிகு நேரத்தில் அதற்கு அச்சமில்லை. அதன் இலைகள் பசுமையாக இருக்கும். வறட்சிமிகு ஆண்டிலும் அதற்குக் கவலை இராது. அது எப்போதும் கனி கொடுக்கும். இதயமே அனைத்திலும் வஞ்சகம் மிக்கது. அதனை நலமாக்க முடியாது. அதனை யார்தான் புரிந்துகொள்வர்? ஆண்டவராகிய நானே இதயச் சிந்தனைகளை ஆய்பவர்; உள்ளுணர்வுகளைச் சோதித்து அறிபவர். ஒவ்வொருவரின் வழிகளுக்கும் செயல்களின் விளைவுக்கும் ஏற்றவாறு நடத்துபவர்.

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1805 – நெப்போலியன் தலைவனாக இருந்த இத்தாலியக் குடியரசு, இத்தாலியப் பேரரசானது. நெப்போலியன் அதன் பேரரசனானான்.
- 1845 – இறப்பர் பட்டி கண்டுபிடிக்கப்பட்டது.
- 1950 – கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் “கலிபோர்னியம்” என்ற 98ஆவது தனிமத்தைக் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.
- 1958 – ஐக்கிய அமெரிக்கா வங்கார்ட் 1 செயற்கைக்கோளை ஏவியது.
- 1959 – 14ஆவது தலாய் லாமா டென்சின் கியாட்சோ, திபெத்திலிருந்து வெளியேறி இந்தியா வந்துசேர்ந்தார்.
- 1966 – காணாமல்போன ஐக்கிய அமெரிக்காவின் ஐதரசன் குண்டை ஆல்வின் என்ற நீர்மூழ்கிக் கப்பல் மத்தியதரைக்கடல் பகுதியில் எஸ்பானியாவுக்கு அருகில் கண்டுபிடித்தது.
- 1968 – அமெரிக்காவின் ஊட்டா மாநிலத்தில் நரம்பு வாயுவை சோதித்ததில் 6,000 இற்கும் அதிகமான ஆடுகள் இறந்தன.
- 1992 – தென்னாபிரிக்காவில் இனவொதுக்கலை முடிவுக்குக் கொண்டுவர நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பில் 68.7% மக்கள் ஆதரவாக வாக்களித்தனர்.
- 1996 – இலங்கை அணி அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்து கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வென்றது.

# மண்ணெண்ணெய் இன்றி கற்பிட்டியில் கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்பு!

## நூற்றுக்கணக்கான மீன்பிடி இயந்திரப் படகுகள் தேக்கம்




(ரஸீன் ரஸ்மின்)

மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக கற்பிட்டி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் கற்பிட்டி, வன்னிமுந்தல், துறையடி, சின்னக்குடியிருப்பு, ஆனவாசல், தொட்டுப்பொல உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 1500 இற்கும் அதிகமானோர் தமது ஜீவனோபாய தொழிலாக மீன்பிடித் தொழிலையே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், நாளாந்தம் கடற்றொழிலுக்கு தேவையான மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு காணப்படுவதாக மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதற்காக எரிபொருள் நிலையத்திலும், மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குகின்ற வர்த்தக நிலையங்களிலும் நீண்ட நேரம் வரிசையில் காத்து நிற்கின்றபோதிலும், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரம் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதாகவும் மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள நாளொன்றுக்கு கரையிலிருந்து 40 கிலோ மீற்றர் தூரம் சென்று வர 100 லீற்றர் வரை மண்ணெண்ணெய் தேவைப்படுவதாகவும் மீனவர்கள் குறிப்பிட்டனர்.

எனினும், மீனவர் ஒருவருக்கு 20 லீற்றர் வரை வழங்கப்படுவதால் ஐந்து நாளைக்கு சேமித்து வைத்த மண்ணெண்ணெய்யை பயன்படுத்தியே ஒரு தடவைக்கு மீன்பிடித் தொழிலுக்காக பயணிக்க வேண்டிய அவல நிலை காணப்படுவதாகவும் கற்பிட்டி மீனவர்கள் கூறுகின்றனர்.

இதனால், கடந்த சில நாட்களாக நூற்றுக்கணக்கான மீன்பிடி இயந்திரப் படகுகள் கற்பிட்டி கரையோர பகுதிகளில் தரித்து நிற்பதையும் அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இவ்வாறு அன்றாட மீன்பிடித் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளதால், மீனவர்களினதும், மீன்பிடித் தொழிலாளர்களினதும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே, மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மீனவர்களுக்கு தேவையான மண்ணெண்ணெயை வழங்குவதற்கு அரசாங்கம் விஷேட திட்டங்களை அமுல்படுத்த வேண்டும் எனவும் கற்பிட்டி மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 15.03.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 08 0880 | 088 3407 |
| கனேடியன் டொலர் | 1 6 587 | 105 6436 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 30 4386 | 32 4006 |
| யூரோ | 182 5712 | 2 3 3622 |
| ஜப்பான் யென் | 1 1335 | 1 2323 |
| சிங்கப்பூர் டொலர் | 083 8351 | 1 1 44 2 |
| ஸ்ரேலிங் பவுன் | 235 6173 | 25 0723 |
| சுவிஸ் பிரான்ங் | 171 180 | 183 05 0 |
| ஐ.அ.டொலர் | 153 5566 | 163 8868 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 60 3325 |
| குவைட் | குவைட் தினார் | 77 58 7 |
| ஓமான் | ஓமான் றியால் | 584 6256 |
| கட்டார் | கட்டார் றியால் | 62 2 14 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 60 2864 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 61 8152 |

# நிதி அமைச்சர் இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் சந்திப்பு




இரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ நேற்று (16) அந்நாட்டு வெளியுறவு அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஸ்ரிங்லாவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்த சந்திப்பு டெல்லியிலுள்ள ஐ.சி.டி. ஹோட்டலில் இடம்பெற்றது. இந்த சந்திப்பில் இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# நல்லாந்தழுவை முஸ்லிம் வித்தியாலயத்தின் பாடசாலை முகப்பு திறந்து வைப்பு




(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட நல்லாந்தழுவை முஸ்லிம் வித்தியாலயத்தின் முப்பெரும் விழா நேற்று (15) பாடசாலை அதிபர் ஏ.என்.எம்.எம்.நஜீப் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த பாடசாலையின் முன் முகப்பு திறப்பு விழாவும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்களும் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினரின் கடந்த 2021 ஆம் ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் இருந்து கட்டி முடிக்கப்பட்ட நல்லாந்தளுவ முஸ்லிம் ஆரம்பப் பாடசாலை நுழைவாயில் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமினால் திறந்து வைக்கப்பட்டது.

மதுரங்குளி நல்லாந்தளுவ பிரதேச நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ஏ.எம். சப்ரின், குழுத் தலைவர் முஹம்மது சியான், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன புத்தளம் மாவட்ட முஸ்லிம் பிரிவு அமைப்பாளருமான ஏ.எச்.எம்.ரியாஸ், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆப்தீன் எஹியா உட்பட அதிபர், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க குறித்த முகப்பு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் அதிதிகளால் கௌரவிக்கப்பட்டுள்ளதுடன், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஏ.எச்.எம்.றியாஸ், புத்தளம் நகர சபை உறுப்பினர் நகுலேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினரின் யாழ். மக்கள் இணைப்பதிகாரி அமீர் அலி ஆசிரியர் உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, மக்களுக்கு ஆற்றிவரும் சேவையை பாராட்டி பாடசாலை அதிபரினால், நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அறுபது வகையான மருந்துகளின் விலைகளில் அதிகரிப்பு

மருந்து வகைகளின் விலைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. விலைத் திருத்தங்களுடனான அதி விசேட வர்த்தமானி நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஏஸ்பிரின், பெரசிட்டமோல், அல்பெண்டசோல், அமொக்சிசிலின், கிலாவுலினிக் அமிலம, கிலாரித்ரோமைசின், அசித்ரோமைசின், டொக்சிசைக்லின் உள்ளிட்ட 60 வகையான மருந்துகளின் விலை இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

# தத்துவம் தங்கராசு



எதிர்க்கட்சி கொழும்பில் பேரணியொன்றை நடத்தியதே...

அதில் அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பியது கொஞ்சம். மற்றதெல்லாம் சஜித் புகழ் பாடல்தான்.

அவ்வளவு மக்கள் கூட்டத்தை திரட்டி தனக்கு மக்கள் ஆதரவு இருப்பதாக சம்பிக்க ரணவக்கவுக்கு காட்டுவதை மட்டும் நோக்கமாகக் கொண்ட சஜித், பிரச்சினைகளை தீர்க்க எந்த பரிந்துரைகளையும் முன்வைக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்துங்கள் என்கிறார், இலங்கைக்கு எண்ணெய் வழங்க நாடுகள் தயாராக உள்ளதென்கிறார். இந்த பேச்சு இப்போதுள்ள நிலையில் எடுபடுமா? மக்கள் சாப்பிடவே காசில்லை. தேர்தல் ஒரு கேடா?

மக்கள் கால்கடுக்க வரிசைகளில் நின்று அரசுக்கு சாபம் விடுகின்றனர். ஆனால் அரசுக்கு எதிராக சவால் விடும் வகையில் எதிர்க்கட்சி இல்லை...

இதே மக்கள் பேரணியை மஹிந்த ராஜபக்ஷ நடத்தியிருந்தார் என்று வையுங்கள்... நாலைந்து பேரின் அரசியல் உரையுடன் ஜனாதிபதி செயலகத்தின் முன் பாயை போட்டு படுத்திருப்பார்கள்...

சம்பிக்க இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு அமைதியாக இருந்தார். அதாவுல்லாஹ் சொன்னது போல் சஜித் பால் போத்தல் தான் போலும்...

# ஓமான் உயர்மட்ட வர்த்தகப் பிரதிநிதிகளின் இலங்கைக்கான ஆக்கபூர்வ விஜயம் நிறைவு



ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓமான் வர்த்தக மற்றும் தொழில்துறையிலிருந்து 17 உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்ட ஓமானி வணிகக் குழுவின் முதல் இலங்கை விஜயம் வெற்றிகரமாக நிறைவடைந்தது. இந்த விஜயம் கடந்த 05ஆம் திகதி முதல் 09 ஆம் திகதிவரை இடம்பெற்றிருந்தது.

ஓமான் வர்த்தகம் மற்றும் தொழில்துறையின் தலைவர் பொறியியலாளர் ரெதா பின் ஜுமா அல் சலேஹ் தலைமையில் உயர்மட்ட வணிகக்குழு ஓமானின் முழு தனியார் துறையின் ஒரே பிரதிநிதியாக உள்ளது. ஓமான் சுல்தானேற்றுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் இலங்கையில் உள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தூதுக்குழுவை வரவேற்றதுடன், இலங்கைக்கும் ஓமான் சுல்தானேற்றுக்கும் இடையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டில் கிடைக்கும் வாய்ப்புகளை ஆராய்வதும் இரு நாடுகளின் தனியார்த்துறைகளுக்கிடையில் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்துவதும் இந்த விஜயத்தின் நோக்கமாகும்.



அவர்களின் விஜயத்தில் தூதுக்குழுவினருடன் இணைந்திருந்தார்.

தூதுக்குழுவினர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து தமது விஜயத்தின் போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து அவருக்கு விளக்கமளித்ததுடன், இலங்கையுடனான நெருக்கமான பொருளாதார ஈடுபாட்டுக்கான தமது தீவிர ஆர்வத்தை வெளிப்படுத்தினர். இந்த சந்திப்பின்போது இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த விஜயத்தின் போது நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோரையும் பிரதிநிதிகள் குழு சந்தித்தது.

வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, வேலை வாய்ப்புகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பரஸ்பர ஆர்வமுள்ள பல்வேறு துறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த சந்திப்பில் இலங்கைக்கான ஓமான் சுல்தானேற்றின் தூதுவர் ஷேக் ஜுமா ஹம்தான் அல் ஷெஹியும் கலந்து கொண்டார்.

# மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரியில் 34மாணவர்கள் சித்தி

(மன்னார் நகர் நிருபர்)

புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் மன்/சித்திவிநாயகர் இந்து கல்லூரி மாணவ மாணவிகள் 34 பேர் சித்தியடைந்து மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளது.




அதே நேரத்தில் மாவட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் சித்தி விநாயகர் இந்து கல்லூரி மாணவன் யு.டியன்றியா 184 புள்ளிகளை பெற்று மாவட்ட ரீதியில் மூன்றாம் நிலையையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

இம்முறை மன்/சித்திவிநாயகர் இந்து கல்லூரியை சேர்ந்த விசேட தேவையுடைய மாணவன் வு.ரணிதனும் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாத்தளையில் பொருட்களின் விலைகளை தன்னிச்சையாக தீர்மானிக்கும் வர்த்தகர்கள்

## நுகர்வோர் விவகார அதிகாரசபை நடவடிக்கை எடுக்காமை குறித்து மக்கள் விசனம்

(மாத்தளை நிருபர்)

மாத்தளை மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவுவதால் வர்த்தகர்கள் தன்னிச்சையான முறையில் அதிகரித்த விலையில் பொருட்களை விற்பனை செய்வதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இது குறித்து நுகர்வோர் அதிகாரசபையினர் நடவடிக்கை எடுக்காமையினால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகவும் தமது உணவுத் தேவையை எவ்வாறு பூர்த்திசெய்வது என்பது குறித்தும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

குறிப்பாக, கோதுமை மாவின் விலை அதிகரிப்பினால் 85 ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு இறாத்தல் பாண் தற்போது 125 ரூபா தொடக்கம் 135 ரூபா வரை விற்கப்படுகின்றது. தற்போது நுகர்வோர் அதிகாரசபையினரின் செயல்பாடுகள் செயலிழந்து காணப்படுகின்றன. இதனால் மாத்தளை மாவட்டத்தில் பேக்கரி உற்பத்தியாளர்கள் பொருட்களின் விலைகளை தன்னிச்சையாக அதிகரித்து விற்பனை செய்கின்றனர்.

பேக்கரி உற்பத்திகளான பாண் மற்றும் சோட்டீஸ் வகைகள் தன்னிச்சையாக ஒவ்வொரு கடைகளிலும் ஒவ்வொரு விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன. மேலும் அப்பொருட்களின் தரங்களும் தற்பொழுது குறைந்தே காணப்படுகின்றது. இதனால் நாம் கொடுக்கும் பணத்துக்கேற்ற தரமான



உற்பத்திப்பொருட்கள் கிடைப்பதில்லை.

உதாரணமாக முன்பெல்லாம் ஒரு இறாத்தல் பாண் 450 கிராம் இருந்தது. ஆனால், தற்போது 380 தொடக்கம் 400 கிராம் வரையிலேயே இருக்கின்றது. இதற்கு 125 ரூபா, 135ரூபா கொடுத்து வாங்கவேண்டியதாக உள்ளது. இவை நியாயமான விலைகளே கிடையாது. எமது வாழ்வாதாரத்தை அரசாங்கம் புரிந்து நடக்க வேண்டும் என மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்

மேலும் மருந்தகங்களில் அநேகமான மருந்துகளுக்குத் தட்டுப்பாடும் நிலவுகின்றது. இதனால் நோயாளிகள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். பெனடோல், பெனடோல் சிரப், பிரின்டன் சிரப், பெனடின், பெரசிட்டமோல் உட்பட அநேகமான மருந்துகள் தற்போது கடைகளில் இல்லை. குழந்தைகளுக்கான அங்கர் பால்மா உட்பட புட்டிப்பால்களுக்கும் தட்டுப்பாடு நிலவும்போது பல்வேறு குடும்பத்திலுள்ள தாய்மார்கள் உட்பட கர்ப்பிணிகளும் பல சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறித்த பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்து முறையாக எமக்கு வழங்க நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் நிவர்த்திசெய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர்.



கம்பளை - நாவலப்பிட்டி பிரதான வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக அதிகமான வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்று பெற்றோல் நிரப்பிக் கொண்டு சென்றதை படங்களில் காணலாம். மேலும் மக்கள் கேன்களிலும் பெற்றோல் பெறுவதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்தனர். **(படங்கள்: கம்பளை யோகா)**

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பதுளை கல்வி வலயத்துக்குட்பட்ட ஸ்பிரிங்வெலி கோட்டகொட தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றியவர்களில் எம்.சிவஷ்திகா (157), ஆர்.தர்ஷினி (157) ஆகியோர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துகளை தெரிவிக்கின்றது.

(நடராஜா மலர்வேந்தன்)

## நூதன முறையில் போராட்டம்




(பதுளை நிருபர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையேற்றத்தைக் கண்டித்து கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தி மாபெரும் போராட்டமொன்றை நேற்று முன்தினம் முன்னெடுத்திருந்தது. மக்கள் தற்போது பிச்சையெடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டும் விதமாக ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை பிரதேச சபை உறுப்பினர் ஈசன் பிச்சையெடுக்கும் நூதனப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளார்.

# சப்ரகமுவ மாகாண உள்ளூராட்சி சபை தலைவர்களுடனான கலந்துரையாடல்



(இரத்தினபுரி நிருபர்)

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி சபை தலைவர்களுக்கும் மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் மாகாண சபை கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது.

இதன்போது சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, பலாங்கொடை, எம்பிலிபிட்டிய, கேகாலை ஆகிய நகர சபைகள் மற்றும் 25 பிரதேச சபைகள் உட்பட மொத்தம் 29 உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் மேற்படி மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கும் நூலகங்களுக்கு நூல்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, மாகாண உள்ளூராட்சி சபை ஆணையாளர் துலிப் சொமிரத்ன உட்பட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.



2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் ஹட்டன் வலயக்கல்வி பணிமனைக்கு உரித்தான கோட்டம் மூன்றில் உள்ள மஸ்கெலியா புளும்பீல்ட் தேசிய கல்லூரியில் எஸ்.தாரணிதா 177 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். மேலும் எ.கபிலாஸ் (168), எஸ்.பவித்திரகிருஷாணி (159), எம்.முரளிகிருஸ்ணா (158), எம்.கிருத்திக் வினோத்குமார் (152), எஸ்.சமேஷிக்கா (146) ஆகியோரும் மேற்படி புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்த மாணவர்களுடன் பாடசாலை அதிபர் என்.பரமேஸ்வரன் மற்றும் வகுப்பாசிரியர்களான யூ.ராஜேஸ்வரி, எஸ்.மங்களேஸ்வரி ஆகியோரும் கற்பித்த ஆசிரியர்களும் உடன் காணப்படுகின்றனர்.

**(செ.தி.பெருமாள்)**



2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் ஹட்டன் ஸ்ரீபாத ஆரம்ப பாடசாலையிலிருந்து தோற்றியவர்களில் 18 பேர் சித்தியடைந்துள்ளனர். பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுடன் அதிபர் திருமதி இரேஷா ஹெட்டியாராச்சி மற்றும் கற்பித்த ஆசிரியை ஆகியோருடன் காணப்படுகின்றனர். **(மனூர சுதத் செல்லஹேவா)**

# புஸல்லாவை ஸ்ரீகதிரேசன் ஆலய பங்குனி உத்தர அலங்கார உற்சவம்



**புஸல்லாவை ஸ்ரீகதிரேசன் ஆலய பங்குனி உத்தர அலங்கார உற்சவம் நேற்று காப்பு கட்டுதல் நிகழ்வுடன் ஆரம்பமானது. இதன்போது நடைபெற்ற கிரியை வழிபாடுகளை படங்களில் காணலாம்.**

புஸல்லாவை ஸ்ரீகதிரேசன் சுவாமி தேவஸ்தான பங்குனி உத்தர அலங்கார உற்வசம் நேற்று காப்பு கட்டுதல் மற்றும் 108 சங்காபிஷேக நிகழ்வுடன் ஆரம்பமானது.

இன்று காலை 07 மணிக்கு திருமஞ்சனம் எடுத்தலுடன், பறவைக்காவடி நகர்ப்பவனி ஆரம்பித்து ஆலயத்தை வந்தடைந்தவுடன், ஆலய முன்றலில் தீ மிதிப்பு இடம்பெறவுள்ளது. மேலும், மகேஸ்வர பூஜையுடன் அன்னதானம் இடம்பெற்று மாலை 03 மணிக்கு மாவிளக்கு பூஜையும் திருவிளக்கு பூஜையும் நடைபெறவுள்ளன. மாலை 06 மணிக்கு உபயகாரர் பட்டெடுத்தல், வசந்த மண்டப பூஜை, சுவாமி உள்வீதி வலம் இடம்பெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

நாளை 18ஆம் திகதி காலை 07மணிக்கு பாற்குட பவனியும் 1008 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளன. மாலை 05 மணிக்கு வசந்த மண்டப பூஜையுடன் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி வெளிவீதி பவனி இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 05.30 மணிக்கு இடும்பன் மடை நடைபெறும்.



2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கு பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்திலிருந்து தோற்றிய 76 பேரில் 18 பேர் சித்தியடைந்துள்ளனர். கே.தபிஷன் (178), எஸ்.வருணாஸ்கர் (170), எஸ்.கவினாஸ் (169), டி.திவியேஸ் (165), ஆர்.லோகிஷன் (164), எஸ்.சதுர்ஜன் (163), வை.மகஜன் (161), எஸ்.ராகுல் (161), எஸ்.திலுக்ஷன் (157), ஜீ.சவினாஷ் (156), எம்.என்.ஏ.சர்ஹான் (156), டி.ரி ஷிகாந் (152), ஏ.கே.ஏ.தாலிஸ் (152), எஸ்.சுபீக்ஷன் (151), எம்.தனுஜன் (150) ஆர்.ஹேம்ஸ்ரீ ப்ரணவ் (149), எஸ்.ஜிஸ்ணு (148), வி.எட்வின் செஹான் (147) ஆகியோர் மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கு வழிகாட்டிய அதிபர் குஞ்சரம் மகேந்திரன், வகுப்பாசிரியைகளான எஸ்.சிவயோகசுந்தரி, வீ.விஜயலட்சுமி ஆகியோருக்கு பாடசாலை சமூகம் மற்றும் பெற்றோர் தமது நன்றிகளையும் சித்தியடைந்த மாணவர்களுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

(பதுளை நிருபர்)





2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் நுவரெலியா சென்கூம்ஸ் மகா வித்தியாலயத்திலிருந்து தோற்றியவர்களில் பத்மரஞ்சன் கவிஷாலினி (162), அசோக் தமிறன் (153), ரமேஸ் சாய்சரண் (146) ஆகியோர் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் சிறந்த பெறுபேறுகளை பெற்று சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறந்த பெறுபேறுகள் கிடைக்க வழிகாட்டியாக இருந்த ஆசிரியர் ரட்ணகுமாருக்கும் சித்தியடைந்த மாணவர்களுக்கும் மேலும், பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை சமூகம் வாழ்த்துகளை தெரிவித்துள்ளது.

**(செ.திவாகரன்)**

திகதி 15.03.2022
செவ்வாய்க்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4707
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 14,386,030.00
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 9 6 8 2 6 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,200,105.00


Mega POWER
மெகா பவர்
கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1055
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,893,740.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 241,814,218.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து T
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 28 35 42 50


தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 737
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,627,700.00
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 15 21 71 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 102,693,990.40

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# சுழிபுரம் பறாளாய் விநாயகர் ஆலயத்தை ஆக்கிரமிக்க பிக்குகள் முயற்சி

## தடுத்துநிறுத்த அனைவரையும் ஒன்றிணையுமாறு மக்கள் கோரிக்கை





(யாழ். நிருபர்)

சுழிபுரம் பறாளாய் விநாயகர் ஆலய வளாகத்திலுள்ள அரச மரத்தடியில் பௌத்த பிக்குகள் பூஜை வழிபாடு மற்றும் பிரித் ஓதுவதற்கு முனைப்புக்காட்டி வருகின்ற நிலையில், இதனைத் தடுத்துநிறுத்த அரசியல்வாதிகளும், மக்களும் முன் வரவேண்டும் என பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

வரலாற்று பிரசித்திபெற்ற ஆலயம், பறாளாய் விநாயகர் ஆலயமாகும். இந்த ஆலயத்திற்கு அருகே முருகன் ஆலயமும் உண்டு. குறித்த ஆலய வளாகத்தில் பல ஆண்டுகள் பழைமையான அரச மரம் காணப்படுகின்றது.

இந்நிலையில், அண்மைக்காலமாக குறித்த அரச மரத்தடியில் வழிபாடு செய்வதற்கென படையினரின் உதவியுடன் பௌத்த பிக்குகள் அடிக்கடி இந்த ஆலயத்திற்கு வந்து சென்றுள்ளனர்.

இந்நிலையில் இன்று வியாழக்கிழமை பௌர்ணமி தினத்தன்று இங்குள்ள அரச மரத்தடியில் படையினரின் உதவியுடன் பிக்குகள் தாம் பூஜை வழிபாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக ஆலய நிர்வாகத்தில் உள்ளவர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளனர்.

பிக்குகளின் மேற்படி நடவடிக்கையை தடுத்து நிறுத்தி பறாளாய் விநாயகர், முருகன் ஆலயங்களை ஆக்கிரமிப்பின் பிடியிலிருந்து பாதுகாப்பதற்காக அரசியல்வாதிகள், பொதுமக்கள் என அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

# விலையேற்றத்துக்கு எதிராக சைக்கிள் பேரணி





(யாழ். நிருபர்)

அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மல்லாகத்திலிருந்து வலி வடக்கு பிரதேச சபை வரை சைக்கிள் பேரணியாகச் சென்று தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், தற்போதைய விலையேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக வலி. வடக்கு பிரதேச சபையின் சகல பிரதேச சபை உறுப்பினர்களும் சைக்கிளில் பிரதேச சபை அமர்வுக்கு பேரணியாக சென்று எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

# விவசாயிகளுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க விசேட நடவடிக்கை

(யாழ். நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலையிலிருந்து யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையில், விவசாயத்துக்கு தேவையான மண்ணெண்ணெய் மற்றும் டீசலை எரிபொருள் நிலையங்களில் பெற்றுக்கொடுக்க விசேட பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நேற்று முன்தினம் (15) இடம்பெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விற்பனை நிலையங்களில் போத்தல்களில் மண்ணெண்ணெய் மற்றும் டீசலை கொள்வனவு செய்யும் சிலர் அதனை கறுப்புச் சந்தையில் கூடிய விலையில் விற்பனை செய்வதாக கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து, டிரக்டர்கள், விவசாய உபகரணங்களை எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு கொண்டுசென்று எரிபொருளை கொள்வனவு செய்யவேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளமை தொடர்பில் இக்கூட்டத்தில் பிரேரிக்கப்பட்டது.

இதனையடுத்து, பிரதேச கமநல சேவைகள் நிலையத்தினூடாக சேகரிக்கப்படும் விவசாயிகளது பெயர் விபரப்பட்டியல், அரசாங்க அதிபர் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன பிராந்திய பணிப்பாளரின் ஒப்புதலுடன் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இதன்மூலம் விவசாயிகள் தமக்கு தேவையான மண்ணெண்ணெய், டீசலை கொள்கலன்களில் போத்தல்களில் பெற்றுக்கொள்ள முடியும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டுச் சூழ்நிலையிலும் விவசாயத்துக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பை தொடர்ந்தும் பேணுமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சமய தீட்சை


(யாழ். நிருபர்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலுள்ள யோகலிங்கேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இன்று (17) காலை 7 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் இடம்பெறவுள்ளது.

ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ வி. செல்வ சேனக் குருக்கள் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில், கலாசாலையின் ஆசிரிய மாணவர்கள் சமய தீட்சை பெறவுள் ளனர்.

ஆசிரிய மாணவர்களை விட ஆர்வமுள்ள எவரும் கலந்து சமய தீட்சை பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊர்காவற்றுறையில் மூன்று இளைஞர்கள் கைது!



ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 03 இளைஞர்களை கைதுசெய்துள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் நாரந்தனை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், சந்தேகநபர்களிடமிருந்து 550 மில்லிகிராம், 80 மில்லிகிராம் மற்றும் 50 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழில் ஹெரோயினுடன் பெண் உள்ளிட்ட மூவர் கைது; ஒருவர் கொலன்னாவ வாசி

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனிப்புலம் - கலட்டி பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் உட்பட இருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலடிப்படையில் பனிப்புலம் - கலட்டி பகுதியிலுள்ள வீடொன்றினை பொலிஸார் முற்றுகையிட்டிருக்கின்றனர்.

இதன்போது வீட்டில் 1 கிராம் 70 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. குறித்த ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் 36 வயதான பெண் ஒருவரை கைதுசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட மேலதிக விசாரணை மற்றும் சோதனை நடவடிக்கையின்போது சங்கானையை சேர்ந்த 27 வயது இளைஞனும், கொலன்னாவ வெல்லம்பிட்டிய பகுதியை சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# எரிபொருள் வளப் பங்கீடு தொடர்பில் கிளிநொச்சியில் கலந்துரையாடல்



(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சியில் நிலவும் எரிபொருள் வளப்பங்கீடு தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதியுடன் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கலந்துரையாடல் நேற்று முன்தினம் (15) இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் எரிபொருள் விநியோகம் தொடர்பில் ஆராயப்பட்ட விடயங்களில் வீட்டுப் பாவனைக்கான மண்ணெண்ணெய் விநியோகத்தினை வாராந்தம் 5 லீற்றர் வீதம் குடும்ப அட்டை ஊடாக பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களில் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை முன்னெடுக்கவும், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குறிப்பாக விவசாயம், மீன்பிடித்துறைகளுக்கான விநியோகத்தினை சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளின் உறுதிப்படுத்தலுடன் கூடிய கடிதத்தினை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை முன்னெடுக்கவும் இக் கலந்துரையாடலில் தீர்மானம் மேற்கொள்ளப்படடது.

மேற்படி கலந்துரையாடலில் மாவட்ட செயலக அதிகாரிகள், பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதி, பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# மாணவனுக்கு பாலியல் துன்புறுத்தல்; தென்மராட்சி ஆசிரியருக்குப் பிணை

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 13 வயது சிறுவனுக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தல் புரிந்த குற்றச்சாட்டில் கைதான ஆசிரியருக்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

13 வயதான குறித்த சிறுவனுக்கு ஆண் ஆசிரியர் ஒருவர் ஓரின பாலியல் தொடர்பான துன்புறுத்தல்களை புரிந்துவந்த நிலையில் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்ட குறித்த சிறுவன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட மாணவன் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் குறித்த ஆசிரியர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டு, நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் அந்தோனிப்பிள்ளை யூட்ஸன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டதையடுத்து, வழக்கு தொடர்பில் விசாரித்த நீதவான், ஆசிரியருக்கு பிணை வழங்கினார்.

# வீட்டுப் பணிகளை பூரணப்படுத்த 15 குடும்பங்களுக்கு சீமெந்து

(சாவகச்சேரி நிருபர்)

யாழ்ப்பாணம், புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் சுவிட்ஸர்லாந்து பாசல் மாநகர் செந்தமிழ்ச்சோலை தமிழ்ப் பாடசாலை ஆசிரியருமான திருமதி பத்மா தர்மராஜாவின் நிதிப் பங்களிப்பில் யாழில் 15 பயனாளிகளுக்கு சீமெந்து பைக்கற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

வீட்டுத் திட்டப் பணிகளை பூரணப்படுத்த முடியாதிருந்த 15 பயனாளிக் குடும்பங்களுக்கே இவ்வாறு குறித்த உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

சீமெந்துப் பைக்கெற்றுகளை சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி பயனாளிகளிடம் அண்மையில் கையளித்திருந்தார்.



# வவுனியா மாவட்ட செயலகத்தில் மகளிர் தின விழாவும் புத்தக வெளியீடும்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட செயலகத்தில் மகளிர் தின விழாவும் புத்தக வெளியீடும் மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று (16) காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

மாவட்டத்தில் தன்னம்பிக்கையால் தொழிலிலும் மக்கள் சேவைகளிலும் ஈடுபடும் பெண்கள் தொடர்பில் பல விடயங்களை வெளிக்கொணரும் சாதனைக்காரிகைகள் புத்தக வெளியீட்டினை அரசாங்க அதிபர் பி.ஏ. சரத்சந்திர வெளியீடு செய்ததுடன் விருந்தினர் உரை, அதிதிகள் உரை என்பனவற்றுடன் நிகழ்வு இடம்பெற்றது. 2022ஆம் ஆண்டுக்கான வர்த்தகக் கண்காட்சியும் மாவட்ட செயலகத்தில் சிறப்புற இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலகத்தின் ஊடாகவும் உள்ளூர் உற்பத்திகளையும், உற்பத்தியாளர்களையும் ஊக்குவிக்கும் முகமாக குறித்த கண்காட்சி இடம்பெற்றது.

குறித்த கண்காட்சியில் வவுனியா மாவட்டத்தில் உற்பத்தியாகும் பொருட்களை அதிகம் காண முடிந்தது.

மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ. சரத்சந்திர தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், உதவி அரசாங்க அதிபர் மகிந்தன் சபர்யா, மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் லதா உதயமூர்த்தி, தனியார் நிதி நிறுவனத்தின் முகாமையாளர்களான எச்.எம்.மகிஸ் மற்றும் ஆசார்த் மற்றும் அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

கண்காட்சியின் ஒரு கட்டமாக விற்பனையும் இடம்பெற்றது.


அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பொருட்களைக் கொள்வனவு செய்து சென்றனர்.





# மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற்சந்தை நிகழ்வு





(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்ட செயலக மனிதவள வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மொபிட்டல் தொலைத்தொடர்பு நிறுவனத்தினால் மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற்சந்தை நிகழ்வு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் நேற்று முன்தினம் (15) காலை 9.30 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற்சந்தை ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்துகொண்டதோடு, "மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற்சந்தையை மொபிட்டல் நிறுவனத்துடன் இணைந்து இன்றையதினம் மேற்கொள்கிறோம். கடந்த வருடமும் பல தொழிற்சந்தைகளை நடத்தி தொழில் தேடுவோருக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுத்துள்ளோம். அந்தவகையில் இத் தொழில்சந்தையை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரித்துக்கொள்தல் வேண்டும். உங்கள் தொடர்பாடல் திறனை விருத்திசெய்து தொழில் வழங்குநராகவும் மாறவேண்டும். இதனூடாக நீங்கள் சமூகத்தில் முன்னுதாரணமாக திகழமுடியும்" எனவும் குறிப்பிட்டார்.

இத்தொழில் சந்தையில் மனிதவள வேலைவாய்ப்புத் திணைக்கள இணைப்பாளர் கருணாகரன் மற்றும் மொபிட்டல் நிறுவனப் பிரதிநிதிகள், மனிதவள வேலைவாய்ப்புத்திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# தமிழர்களுடைய உயிர் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியா?

## நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கேள்வி



(கனகராசா சரவணன்)

காணாமலாக்கப்பட்ட மற்றும் மரணித்தவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவு என தெரிவித்த நீதி அமைச்சர் ஒரு ஒட்டுமொத்த தமிழினத்தை மலினப்படுத்துகின்ற மனித நேயத்துக்கு அப்பாற்பட்டு செயற்படுகின்ற ஒருவர் என்பதுடன், தமிழர்களுடைய உயிர் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியா? என நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

காணாமல்போனோரின் உறவுகளுக்கு அரசினால் ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கும் யோசனையை நீதி அமைச்சர் அமைச்சரவையில் முன்வைத்தார். இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் நேற்று (16) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் நீதி அமைச்சர், காணாமல்போனோர் தொடர்பாக அமைச்சரவையில் முன்வைத்த யோசனை ஒட்டுமொத்த தமிழினத்தை மலினப்படுத்துகின்ற விடயமாகும் என்பதுடன், தமிழர்களை இவர்கள் எவ்வாறு எந்தளவுக்கு வைத்திருக்கின்றார்கள் என்பது இந்த நீதி அமைச்சர் வெளியிட்டிருப்பது மூலம் தெரியவரும் ஒரு வேதனையான - கவலையான விடயம்.

அதேவேளை, தமிழர்களுடைய உயிர் ஒரு இலட்சம் ரூபா பெறுமதி என்ற அடிப்படையில் இவர்கள் கையாள்கின்ற விடயத்துக்கு மனவேதனையுடனான எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், அரசாங்கம் அது சம்பந்தமாக எந்தவிதமான நியாயமான ஒரு விடயங்களையும் கையாள்வதற்கு தயாரில்லை என்ற அடிப்படையில் உள்ளது.

இந்த நிலையில் இன்று காணாமலாக்கப்பட்டவர்களின் எமது உறவுகள் நீண்டகாலமாக அவர்களது நியாயங்களை பெற்றுத்தரவேண்டும் என சர்வதேசத்தை கோரி வருகின்றனர். இவ்வாறு சர்வதேசத்தை கோரி வரும் இந்த காலகட்டத்தில் இந்த நீதி அமைச்சர் முன்வைத்திருக்கின்ற விடயம் எமது தமிழினத்தை மிக மோசமாக இந்த அரசாங்கம் கையாள்கின்ற விடயத்தை இதன் மூலமாக எடுத்துரைத்துள்ளார்.

காணாமல்போன உறவுகள் மற்றும் மனித உயிர்களைப் பறிகொடுத்த சமூகத்தை மோசமான ஒரு சூழலுக்கு இட்டுச்செல்லும் என்பதுடன், மரணித்தவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவு என தெரிவித்த நீதி அமைச்சர் ஒரு மனிதநேயத்துக்கு அப்பாற்பட்டவர் என்பதை காட்டுகின்றது.

எனவே, இவ்வாறு நாட்டில் ஒரு நீதி அமைச்சர் ஒட்டுமொத்த தமிழினத்தை மலினப்படுத்துகின்ற விடயமாக செயற்படுகின்ற நடவடிக்கையை கைவிடவேண்டும் - என அவர் தெரிவித்தார்.

# திருமலையில் புவி வெப்பமடைதலை தடுக்க 100 பயன்தரு மரக்கன்றுகள் வழங்கிவைப்பு



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலையில் 100 வறிய குடும்பங்களுக்கு சுவிற்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் பயன்தரு மரக்கன்றுகள் நேற்று (16) வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

அறப்பணி மையத்தின் நிறுவுனர் சக்தி சுவிஸ் சுரேஷ் சகோதரரின் பிறந்த தினத்தை முன்னிட்டு இம்மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

திருகோணமலையின் அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் இவ்வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, மாணவர்களுக்கு கேக் உள்ளிட்ட சிற்றுண்டி பகிரப்பட்டு பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

அதனைத்தொடர்ந்து விபுலானந்தா கல்லூரியில் ஒரு தொகுதி மரங்கள் நாட்டி வைக்கப்பட்டதுடன், அன்புவழிபுரம், செல்வநாயகபுரம், உதயபுரி பிரதேசங்களிலுள்ள வறிய குடும்பங்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இதன்போது, அறப்பணி மையத்தின் அறப்பணியாளர்களுக்கு மதிய உணவு மற்றும் பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டிருந்தன. இந்நிகழ்வுகளில் கலைமகள் வித்தியாலய அதிபர், விபுலானந்தா கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், செல்வநாயகபுரம் கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், அறப்பணி மையத்தின் அறப்பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

புவி வெப்பமடுதலை தடுக்கும் மற்றும் உயிர்வாயு ஒட்சிசனின் பெருக்கத்தை அதிகரிக்கும் நோக்கில் அறப்பணி மையத்தின் நிறுவுனர் சக்தி சுவிஸ் சுரேஷ் சகோதரரின் எண்ணக்கருவிற்கேற்ப இம்மரக்கன்றுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








மட்டக்களப்பு நகரில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் நீண்டவரிசையில் எரிபொருள், மண்ணெண்ணெயை பெறுவதற்கும் மக்கள் நீண்டவரிசையில் காத்திருப்பு. (படங்கள் - கனகராசா சரவணன்)

# அக்கரைப்பற்று கரையோர பிரதேச முகாமைத்துவ குழுவொன்றை நிறுவுவதற்கான கலந்துரையாடல்



(அக்கரைப்பற்று நிருபர்)

பிரதேச மட்டத்தில் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்தக்கூடிய அனைத்து நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கரையோர பிரதேச முகாமைத்துவக் குழுவொன்றினை நிறுவும் முனைப்பிலான முதல்கட்ட கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை (14) அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கடல் சுற்றாடல் அதிகாரசபையின் ஒழுங்குபடுத்தலில் கரையோர வலயங்களில் ஏற்படும் மாசடைதலை கட்டுப்படுத்துதல், குறைத்தல் மற்றும் தடுத்தலுக்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளும் பொருட்டு, கரையோர சுற்றாடல் கட்டமைப்புகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி, பூகோள அபிவிருத்தி இலக்கினை அடைந்து, கடல் சார்ந்த பிரதேசங்களை பொதுமக்களுக்கு கவர்ச்சிகரமான இடங்களாய் பேணுதல் எனும் நோக்கில் அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட கடல் பிராந்திய வளங்களையும் மேம்படுத்துவது தொடர்பாக இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது அக்கரைப்பற்று மாநகர சபையின் ஆணையாளர் ஏ.ரீ.எம்.றாபி, மாநகர சபை உத்தியோகத்தர்கள், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையினர், கரையோரம் பேணல் திணைக்க ளத்தினர், மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர், பொலிஸார், மீன்பிடித் திணைக்கள உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# திருக்கோவிலில் தெய்வீக கிராம ஆன்மீக எழுச்சிப் பேரணி





(கல்லடி நிருபர்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருக்கோவில் பிரதேச செயலகம், பிரதேச இந்து ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகள் மற்றும் இந்து சமய அமைப்புகளின் ஒழுங்குபடுத்தலில் இந்து சமயப் பாரம்பரிய நிகழ்வுகளை எடுத்தியம்பும் வகையிலான தெய்வீக கிராம ஆன்மீக எழுச்சிப் பேரணியும், உணர்வுபூர்வமான விழாவும் திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (13) கொண்டாடப்பட்டது.

இத்தெய்வீக ஆன்மீக எழுச்சி விழாவானது திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

தம்பிலுவில் பொதுச்சந்தை விநாயகர் ஆலயத்திலிருந்து வழிபாடுகளுடன் ஆரம்பமான நிகழ்வில் ஆன்மீக முன்னிலை அதிதியாக பிரதமரின் இந்துசமய விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ ராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா கலந்துகொண்டதுடன், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசனும், ஆன்மீக அதிதிகளாக திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்கள், பெரியநீலாவணை ஸ்ரீ விஷ்ணு தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ பத்மலோஜன் குருக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது இந்துசமய பாரம்பரிய முறைகளுடனான வீதி விழிப்புணர்வு ஊர்வலம் தம்பிலுவில் பொதுச்சந்தைக் கட்டடத்திற்கு முன்பாக ஆரம்பமாகி, பிரதான வீதி வழியாக திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தைச் சென்றடைந்தது.

இதனைத் தொடர்ந்து ஆலயத்தில் தெய்வீக கிராம நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டு, நந்திக்கொடி ஏற்றுதல், குருபூஜை, கோமாதா பூஜை, மரநடுகை, பிடியரிசி சேமிப்பு, வஸ்திரதானம் வழங்குதல் மற்றும் சூரிய நமஸ்காரம் ஆகியன இடம்பெற்றன. அத்தோடு அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் அரங்கேறின.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நாவிதன்வெளியில் சுயதொழில் புரியும் பெண் முயற்சியாளர்களின் விற்பனைக் கண்காட்சி







(பெரி யநீலாவணை நிருபர்)

நாவிதன்வெளி பிரதேச செயலகம், சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திப் பிரிவு பிரதேச மட்ட மகளிர் சங்கங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த விற்பனை கண்காட்சி மற்றும் பெண் சுயதொழில் முயற்சியாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு என்பன நாவிதன்வெளி பிரதேச கலாசார மத்திய நிலையத்தில் பிரதேச செயலாளர் எஸ் ரங்கநாதன் தலைமையில் நேற்று (16) நடைபெற்றது.

இங்கு "நிலையான எதிர்காலத்திற்காக பால்நிலை சமத்துவம் பேணல்" எனும் தொனிப்பொருளில் விழிப்பூட்டல் வீதி ஊர் ஊர்வலம் இடம்பெற்றதுடன், பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் விற்பனை கண்காட்சிக்கூடங்களை அதிதிகள் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் பிரதேச மட்டத்தில் சேவையாற்றும் மகளிர் சங்கங்கள், நீண்டகாலமாக அங்கத்தவர்களாக இருந்து சிறப்பான சேவையை பொதுமக்களுக்கு வழங்கிவருகின்ற பெண்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டிற்கான சிறந்த பெண் முயற்சியாக தெரிவுசெய்யப்பட்டு கொழும்பில் பாராட்டி கௌரவிக்கப்பட்ட நாவிதன்வெளி மத்திய முகாம் பிரதேசத்தைச் சேர்ந்த திருமதி யூ. நஸ்லியா, அதிகாரிகளினால் நினைவுச்சின்னம், பரிசுப்பொருட்கள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்விற்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடதர நிர்ணய நிலையப் பணிப்பாளர், தாவரவியல் பேராசிரியர் எம்.ஐ.எஸ்.சபீனா பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் கலந்துகொண்டார். நாவிதன்வெளி பிரதேச மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.சித்தி சிபாயாவின் ஒருங்கிணைப் பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர்.லதாகரன், சவளக்கடை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம்.எம்.அஸ்ரப், இஸ்லாமிக் ரி லீப் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் ரி.ரமேஷ் உட்பட பிரதேச பட்ட அதிகாரிகள், மகளிர் சங்கங்களின் பிரதிநிதிகள், கலைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். பல்வேறு கலை கலாசார நிகழ்வுகளும் இங்கு கலைஞர்களால் அரங்கேற்றப்பட்டன.

# புல்மோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்க

## மாணவர்களும் பெற்றோரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்







**(திருகோணமலை நிருபர்கள்)**

திருகோணமலை - புல்மோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்திசெய்யுமாறு கோரி மாணவர்களும் பெற்றோர்களும் நேற்று (16) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புல்மோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியின் பிரதான கதவை மூடி மாணவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி, கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.


"திறமையான மாணவர்கள் பலர் உள்ளோம், ஆனால் வழிநடத்த ஆசிரியர்கள்தான் இல்லை, 1200 மாணவர்களுக்கு 24 ஆசிரியர்கள் எந்த விதத்தில் நியாயம், திறமையான மாணவர்களை வழி நடத்த ஆசிரியர் தா, இடமாற்ற அதிகாரம் உள்ள ZDEக்கு ஆசிரியர்கள் தர அதிகாரம் இல்லையா?" போன்ற பதாதைகளை ஏந்தியவாறு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1905ஆம் ஆண்டு புல்மோட்டையில் முஸ்லிம் மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு தற்போது தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டிருந்த நிலையில், 1200 மாணவர்கள் கல்வி பயின்று வரும் வேளையில் 64 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றபோதிலும் 24 ஆசிரியர்கள் மாத்திரமே கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

தங்களது மாணவர்களின் நலன் கருதி ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் பிரதேச அரசியல்வாதிகள் பல தடவைகள் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பாக திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் ஸ்ரீதரனை கேட்டபோது புல்மோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் 49 ஆசிரியர்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 29 ஆசிரியர்கள் கடமையாற்றி வருவதாகவும் நேற்று முன்தினம் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பட்டதாரி நியமனம் பெற்ற 07 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமித்துள்ளதுடன், திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி வந்த ஆசிரியர் ஒருவரையும் புல்மோட்டை அறபா வித்தியாலயத்தில் கடமையாற்றி வந்த ஆசிரியர் ஒருவரையும் புல்மோட்டை மத்திய கல்லூரிக்கு உடனடியாக அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் சேதனப்பசளை தொடர்பான விழிப்புணர்வு







**(மட்டக்களப்பு நிருபர்)**

ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உதித்த சுபீட்சத்தின் நோக்குக்கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக, பசுமையான நஞ்சற்ற நாடு எனும் தொனிப்பொருளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு இயற்கை உரப்பாவனை தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயலமர்வொன்று நேற்று முன்தினம் (15) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.


மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான கே.கருணாகரனது தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், பசுமை உற்பத்தி செயலணியின் மாவட்ட இணைப்பாளரும் 231ஆவது படைப்பிரிவின் பிறிகேட் கொமாண்டர் திலீப பண்டார, தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட பிரதிப்பணிப்பாளர் கே.எல்.எம்.சிராஜுன், மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத், விவசாய விரிவாக்கல் திணைக்கள பிரதி பணிப்பாளர் வீ.பேரின்பராசா, இரண்டு உரக் கம்பனிகளின் உயரதிகாரிகள், விவசாய போதனாசிரியர்கள், பெரும்போக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உர விநியோக அபிவிருத்தி உத்தியோ கத்தர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மேலும் பல துறைசார் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நோயற்ற ஒரு சமூகத்தின் நஞ்சற்ற உணவை நோக்கிய பயணத்தில் கால போக நெற்செய்கையாளர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள இலவச இயற்கை உர வகைகளின் பாவனை மற்றும் பயன்கள் தொடர்பாக இதன்போது வருகை தந்திருந்த இரண்டு உர கம்பனிகளின் அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்பட்டது.

அத்தோடு இவ்விரு நிறுவனத்தினாலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திரவ உரம் மற்றும் சேதன உரங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக விழிப்புணர்வு வழங்கப்பட்டதுடன், இதன் மூலம் சிறந்த பயனை அடைய முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டதுடன், அரச அங்கீகாரத்துடன் ரஜரட்ட பல்கலைக்கழகத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட உர வகையென இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# போடியார் புலம்பல்!



**பசீல் விலகி இருக்கிறதுதான் இப்போதைக்கு நல்ல தாம் எண்டு முருத்தட்டுவ புத்தபிக்கு ஆனந்த தேரர் சொல்லித்தாரு எலுவா..?**

**பசீல் மட்டுமல்ல மகிந்தா, கோட்டா, நாமல், சாமல், எல்லாம் விலகி ஒளிச்சி இருக்கிறதுதான் அவங்களுக்கு பாதுகாப்பு எண்டத உங்கட பௌத்த பீடம் ஒருக்கா அவங்கட ஊட்ட போய் சொன்னால் நல்லம் சாது..! அதோட தமிழர பேய்க்காட்டிற டக்லசு, அங்கயன், புள்ளயான், வியாளேந்திரன், இவங்களயும் உட்டுப்போட்டு தங்கட வேலய பாக்க சொல்லுங்க.. நாடகம் ஆடுனது போதும் எலுவா..?**

# கிரான் பிரதேச செயலாளரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி




**(மீராவோடை நிருபர்)**

மட்டக்களப்பு - கிரான் பிரதேச செயலாளரினால் வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கிரான் பிரதேச செயலகப் பிரிவு, ஓட்டமாவடி பிரதேச சபை ஆகிய நிர்வாக எல்லைக்குட்பட்ட சாலபன்சேனையிலுள்ள (கல்லிச்சையார் திடல்) நூர்தீன் என்பவரின் காணிக்கு எதிராகவே குறித்த வழக்கு தொடரப்பட்டு வந்தது.

வழக்கை விசாரணைசெய்த வாழைச்சேனை நீதிமன்ற நீதவான், நூர்தீன் என்பவர் மிக நீண்ட காலமாக அவரது காணியில் வசித்து வந்ததற்கான மற்றும் சட்டரீதியான ஆவணங்கள் இருக்கின்றன எனும் ஆதாரங்களின் அடிப்படையில் பிரதேச செயலாளரினால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

குறித்த வழக்கில் ஆஜரான சட்டத்தரணிகளான ஹபீப் றிபான் மற்றும் எம்.எச்.எம். றம்ஸீன் ஆகியோருக்கு காணி உரிமையாளர் தனது நன்றிகளை தெரிவித்துள்ளார்.

# திருமலையில் ஹெரோயினுடன் இருவர் கைது

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை - கொட்பே மீன்பிடித்துறைமுகத்தில் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (15) மாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் மீன்பிடி நடவடிக்கைக்காக மாத்தறை பகுதியிலிருந்து வருகை தந்த 29 மற்றும் 40 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து 2.5 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்பே மீன்பிடித்துறைமுகத்தில் ஹெரோயின் போதைப்பொருளை பாவித்துக் கொண்டிருந்தபோது பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக குறித்த இருவரையும் சோதனையிட்டபோது அவர்களிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் இருவரையும் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறித்த சந்தேக நபர்கள் தொடர்பில் முன் குற்றம் இருக்கின்றனவா என்பது பற்றிய விபரங்களை தேடி வருவதாகவும் சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் மட்டு. மாவட்டத்தில் 1,271 பேர் சித்தி

**(மட்டக்களப்பு நிருபர்)**

2021ஆம் ஆண்டிற்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 1,271 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களில் இருந்து கடந்த ஆண்டு 9,726 மாணவர்கள் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்த நிலையில், அதில் இம்முறை சுமார் 1,271 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இதனடிப்படையில் மட்டக்களப்பு கல்வி வலயத்திலிருந்து 2,051 மாணவர்கள் பரீட்சைக்கு தகுதிபெற்றிருந்த நிலையில் 449 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதுடன், விசேட தேவையுடைய 3 மாணவர்கள் விசேட தேவையுடைய வகைக்குள் சித்தியடைந்துள்ளனர். அத்தோடு மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் 3,200 மாணவர்கள் பரீட்சைக்கு தகுதிபெற்றிருந்த நிலையில் 459 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், ஒரு மாணவர் விசேட தேவையுடைய வகைக்குள் சித்தியடைந்துள்ளார்.

பட்டிருப்பு கல்வி வலயத்தில் 1,609 மாணவர்கள் பரீட்சைக்கு தகுதிபெற்றிருந்த நிலையில், 172 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், கல்குடா கல்வி வலயத்தில் 1,800 மாணவர்கள் பரீட்சைக்கு தகுதிபெற்றிருந்த நிலையில் 131 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், மண்முனை மேற்கு கல்வி வலயத்தில் 1,066 மாணவர்கள் பரீட்சைக்கு தகுதிபெற்றிருந்த நிலையில் 60 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், ஒரு மாணவர் விசேட தேவையுடைய வகைக்குள் சித்தியடைந்துள்ளார்.

அத்தோடு கொவிட் தொற்றுக்குள்ளான நிலையில் மாவட்டத்திலிருந்து பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் ஐந்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





**(நற்பிட்டிமுனை நிருபர்)**

பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கல்முனை வலயத்தில் அமைந்துள்ள இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் வரலாற்றில் முதல் தடவையாக இரண்டு மாணவர்கள் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர்.

அதில் எம்.எச்.எம்.சாஹில் என்ற மாணவன் 175 புள்ளிகளைப் பெற்று கல்முனை கல்விக்கோட்டத்தில் இரண்டாவது இடத்தை பெற்றதுடன் என்.எம்.நப்லி என்ற மாணவன் 150 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.



**(காரைதீவு நிருபர்)**

கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள காரைதீவு இராமகிருஷ்ண மிசன் பெண்கள் பாடசாலையின் 14 மாணவிகள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இந்நிலையில், கல்முனை கல்வி வலயத்தில் நான்காம் இடத்தை இப்பாடசாலை பெற்றுள்ளது. இம்மாணவிகளை வாழ்த்தும் முகமாக கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் ஏஸ்.புவனேந்திரன் பாடசாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு சித்திபெற்ற மாணவிகளை வாழ்த்தினார்.

இதன்போது சித்திபெற்ற மாணவிகள், வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர், பாடசாலையின் பிரதி அதிபர், கற்பித்த வகுப்பாசிரியர்கள், திருமதி.பி.சிவயோகராசா மற்றும் திருமதி.வி.ஞானேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



**(காரைதீவு நிருபர்)**

கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையின் 14 மாணவிகள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இந்நிலையில் கல்முனை கல்வி வலயத்தில் நான்காம் இடத்தை இப்பாடசாலை பெற்றுள்ளது. இம்மாணவிகளை வாழ்த்தும் முகமாக கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் பாடசாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு சித்திபெற்ற மாணவிகளை வாழ்த்தினார்.

இதன்போது சித்திபெற்ற மாணவிகள், வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர், பாடசாலையின் பிரதி அதிபர், கற்பித்த வகுப்பாசிரியர்களான திருமதி.பி.சிவயோகராசா மற்றும் திருமதி.வி.ஞானேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் கல்முனை வலயத்தில் 446 மாணவர்கள் சித்தி

**(நற்பிட்டிமுனை நிருபர்)**

பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் கல்முனை வலயத்தைச் சேர்ந்த 446 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்குமேல் சித்திபெற்று சாதனை படைத்துள்ளனர்.

முஸ்லிம் பிரிவுக்கோட்டத்தில் 149 மாணவர்களும் தமிழ்ப்பிரிவுக் கோட்டத்தில் 115 மாணவர்களும் சாய்ந்தமருது கோட்டத்தில் 83 மாணவர்களும் நிந்தவூர் கோட்டத்தில் 59 மாணவர்களும் காரைதீவு கோட்டத்தில் 40 மாணவர்களும் சித்திபெற்றுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தெரிவித்தார்.

கடந்தாண்டை விட இவ்வாண்டு 69 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்குமேல் மேலதிகமாக சித்தி பெற்றுள்ளதாக கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஜிஹானா அலிப் குறிப்பிட்டார்.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சை மே மாதம் நடைபெறுவதைக் கருத்தில்கொண்டு கல்முனை வலயத்தில் அடைவு மட்டத்தை அதிகரிக்க முகாமைத்துவத்திற்கான பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.எச்.எம்.பௌஸ் தலைமையில் வெளிவாரி மதிப்பீடுகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கான கொடுப்பனவை தாமதமின்றி விரைவாக பெற்றுத்தாருங்கள்

## உத்தியோகத்தர்கள் கோரிக்கை

(வெல்லாவெளி நிருபர்)

இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பரீட்சைகளுக்கான மேற்பார்வையாளர்கள், உதவி பரீட்சை மேற்பார்வையாளர்கள், மேலதிக பரீட்சை மேற்பார்வையாளர்கள் மற்றும் நோக்குநர்கள் ஆகியோருக்கான கொடுப்பனவை காலதாமதமின்றி விரைவாக வழங்குமாறு பரீட்சைக் கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் கடந்த வருடம் (2021) நடத்தப்பட்ட பல போட்டிப் பரீட்சைகள், வினைத்திறன் பரீட்சைகள், க.பொ.த. சாதாரண செய்முறை பரீட்சை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பரீட்சை நிலையக் கடமை, மதிப்பீட்டுப் பணிகள் மற்றும் வங்கிகளினால் நடத்தப்பட்ட பரீட்சை, ஏஎரி பரீட்சை உட்பட ஏனைய பரீட்சைக் கடமையில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவை காலதாமதமின்றி பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடனடியாக வழங்குமாறு பரீட்சைக் கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் இவ்வாறு கோரிக்கை விடுக்கின்றார்கள்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இவ்வாறு பரீட்சையில் கடமையில் ஈடுபட்ட மேற்படி உத்தியோகத்தர்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளார் கள். நாட்டில் பொருட்களின் அதீத விலையேற்றம், எரிபொருளின் விலையேற்றம் மற்றும் எரிவாயு, கோதுமை மா உட்பட மனித பாவனைக்கு பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களின் விலையேற்றத்தினால் இவ்வாறு பரீட்சை கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் பணப்பிரச்சினை சம்பந்தமாகவும், பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகள், உணவுத் தேவைகள், மங்கல அமங்கல நிகழ்வுக்கான செலவுகள் அதிகரிப்புகள் உள்ளிட்ட பல பிரச்சினைகளில் திணறுவதாக சுட்டிக்காட்டுகின்றார்கள்.

மேலும் இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்படும் பரீட்சைக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவேண்டும். நாட்டில் நாளாந்தம் கூலித்தொழிலில் ஈடுபடும் தொழிலாளியின் நாளாந்த வேதனம் 2500 ரூபா வழங்கப்படும் இன்றைய சூழ்நிலையில் காலைமுதல் மாலைவரையும் நடைபெறும் சாதரணமான பரீட்சைக்கான கொடுப்பனவு போதாது என அவர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

# உயர்தர மாணவர்களின் நலன் கருதி 14ஆவது வருடமாகவும் இலவச கருத்தரங்கு



(பேருவளை விசேட நிருபர்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி 14ஆவது வருடமாக நடத்தும் இலவச கல்விக் கருத்தரங்கு சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் பழைய மாணவர்களின் உதவியோடு நடைபெற்று வருகிறது.

ஆங்கில பாட கருத்தரங்கின் ஆரம்ப வைபவத்தில் அல்ஹுமைஸரா அதிபர் ஜனாப் ரிஸ்கி, ஹழ்ரா ஜமாஅத் தலைவர் இமாம் ஹஸன் முர்ஸி டீளூஊ, இணைச் செயலாளர்களான சம்மாஸ் கரீம், பஸீலுர் ரஹ்மான் உப தலைவர் மௌலவி அம்ஜத் ஸாலி அஷ்ஷாதுலி மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களையும், சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸியா கலாபீடத்திலிருந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# உமர் பாரூக் மஹா வித்தியாலய மாணவி பாத்திமா 152 புள்ளிகளைப் பெற்று சித்தி

(ரஸீன் ரஸ்மின்)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் புத்தளம் புளிச்சாக்குளம் உமர் பாரூக் மஹா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி பாத்திமா நஸ்லர் 152 புள்ளிகளைப பெற்று சித்தியடைந்துள்ளார். இவர், மங்கள எளிய சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.எம்.நபீல் மற்றும் புத்தளம் புளிச்சாக்குளம் உமர் பாரூக் மஹா வித்தியாலய ஆசிரியை எஸ்.ரி.எஸ்.ஜெஸீமா ஆகியோரின் புதல்வியாவார்.

# "நாடாளுமன்றத்திலிருந்து நூலகம் வரை" வேலைத்திட்டம் பொது நூலகத்திலிருந்து ஆரம்பம்





நாடாளுமன்றம் தொடர்பான சரியான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'நாடாளுமன்றத்திலிருந்து நூலகம் வரை' நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் கொழும்பு பொது நூலகத்தில இடம்பெற்றது.

நாடாளுமன்றம் தொடர்பான நூல்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களை நாடளாவிய ரீதியிலுள்ள பொது நூலகங்கள் மற்றும் பாடசாலை நூலகங்களுக்கு வழங்குவதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.

இதன் ஓர் அங்கமாக நாடாளுமன்ற முறைமைகள் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சி நாடாளுமன்ற உயர் அதிகாரிகள் மற்றும் பொது நூலக அதிகாரிகளின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

நாடாளுமன்றத்தின் வரலாற்று முக்கியத்துவம், சட்டவாக்க செயற்பாடுகள் மற்றும் பணிகள், குழு முறைமை தொடர்பில் இதன்போது நூலக அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், நாடாளுமன்றத்தின் பிரசுரமான நாடாளுமன்ற சார சங்ஹிதா புலமை நூலும் வழங்கப்பட்டது.

இதற்கு சமாந்தரமாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட உயரதிகாரிகளுக்கு கொழும்பு பொது நூலகத்தின் அங்கத்துவ அட்டைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், நாடாளுமன்றத்தின் பணியாட்கள் தொகுதியின் பிரதானியும் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர, உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே. ஜயதிலக்க உள்ளிட்ட உயர் அதிகாரிகள் சிலர் கலந்துகொண்டனர்.

# சுயதொழில் முயற்சி - சிறுகைத்தொழில் மகளிர் அமைப்பின் ஐந்தாவது உற்பத்திப்பொருள் கண்காட்சி







(அஷ்ரப் ஏ சமத்)

சுயதொழில் முயற்சி மற்றும் சிறுகைத்தொழில் மகளிர் அமைப்பு 5ஆவது முறையாகவும் தமது உற்பத்திப் பொருட்கள் கொண்டதொரு கண்காட்சியினையும் விற்பனையையும் அண்மையில் கிருலப்பனையிலுள்ள கிரீன் கார்டனில் நடத்தியது

கொழும்பு மகளிர் சிறுகைத்தொழில் உற்பத்தியாளர் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி நாசியா யாக்ஹூப் இதனை ஏற்பாடு செய்தி ருந்தார். கடந்த வருடத்தின் கொரோனா தொற்று நோய் காரணமாக சுயதொழில் முயற்சியில் ஈடுபடும் பெண்கள் தமது உற்பத்திகளை விற்பனைசெய்வதில் பெரிதும் நெருக்கடியை எதிர்நோக்கியிருந்தனர்.

இவ்விற்பனைக் கண்காட்சியில் 45 பெண்கள் தமது உற்பத்திகளை காட்சிக்கு வைத்தன் பயனாக 75 வீதமான உற்பத்திகள் பார்வையாளர்களால் கொள்வனவுசெய்யப்பட்டதாக கூறினார்கள். இதேபோன்று அடுத்த ஆண்டும் உள்ளூர், வெளிநாட்டுக் கைத்தொழில் உற்பத்திகளை காட்சிப்படுத்துவதற்கும் தெஹிவளை பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்படுவதாகவும் என திருமதி நாசியா யாக்ஹூப் தெரிவித்தார்.

இங்கு உணவு உற்பத்திகள், உடை அலங்காரம் வடிவமைப்பு, கிராமிய கலை கலாசார உள்ளூர் உற்பத்திகள், சிறுவர் விளையாட்டு, மருத்தோண்டி அலங்காரம், இந்திரா காந்தி புற்றுநோய் நிறுவனத்திற்காக உற்பத்திகளை விற்பனைசெய்யும் நிலையங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்

மெதகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீகஹவகுர வீதியில் முச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டியின் சாரதி மீது, மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம் நேற்று முன்தினம் (15) இடம்பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டியின் சாரதி படுகாயங்களுக்குள்ளான நிலையில் மெனராகலை வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மெதகம பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மெதகம பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபரொருவரே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்காளான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்பதுடன், சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களும் இதுவரையில் அடையாளங்காணப்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டனர்.

மெதகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

### மிஹிஜய செவன

மிஹிஜய செவன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெத்சத செவன பிரதேசத்தில் நேற்று முன்தினம் மிஹிஜய பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 94 கிராம் 300 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் பெண் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மோதரை பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். மிஹிஜய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### கட்டுநாயக்க

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் நீர்கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 180 கிராம் 856 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தினூடாக உழைக்கப்பட்டதாக கருதப்படும் 2 இலட்சத்து 59 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றுடன் சந்தேகநபர்கள் 10 பேர் கைதுசெய்யப்பட்டு கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை, வலானை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 22 தொடக்கம் 43 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### கொழும்பு

கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் - கோட்டை, புறக்கோட்டை மற்றும் கொம்பனித்தெரு ஆகிய பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகள் இணைந்து நேற்று முன்தினம் கொம்பனித்தெரு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டுவட் வீதி, 57 தோட்டப் பிரதேசத்தில் சுற்றிவளைப்பு மேற்கொண்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 08 கிராம் 190 மில்லிகிராம் ஹெரோயின் பொருளுடன் நபரொருவரும், 01 கிராம் 740 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் உள்ளடங்கலாக போதைப்பொருள் வியாபாரத்தினூடாக உழைக்கப்பட்டதாக கருதப்படும் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 600 ரூபா பணமும், வாளுடன் நபரொருவரும், திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில் ஒருவர் உள்ளிட்ட ஆறுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்ட ஆறு பேரும் கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கொம்பனித்தெரு பிரதேசத்தைச் சேர்ந்த 23 தொடக்கம் 36 வயதுக்கிடைப்பட்ட ஆறுபேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கொம்பனித்தெரு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### பாணந்துறை

பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குரப்புமுல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸ் விசேட அதிரடிப்படை தலைமையக அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 830 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு பாணந்துறை பொலிஸ் நியைத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பாணந்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### அநுராதபுரம்

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவநம்பியத்திஸ்ஸபுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் அநுராதபுரம் குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 06 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

திசாவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### பேலியகொடை

பேலியகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துட்டகைமுனு மாவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் பேலியகொடை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 180 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பேலியகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், பேலியகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீவலி ஒழுங்கை பிரதேசத்தில் பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கை யின்போது 05 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பிரதேசத்தைச் சுர்ந்த 29 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் .

## கோடாவுடன் நபரொருவர் கைது

### ஹொரணை

ஹொரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பர்த் வத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஹொரணை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சட்டவிரோத மதுபான தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் 8,596 லீற்றர் கோடாவுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இங்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை எதிர்வரும் 25ஆம் திகதி ஹொரணை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தெரிவித்து பொலிஸார் பிணையில் விடுவித்துள்ளனர். ஹொரணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கஜ முத்துகளுடன் ஒருவர் கைது

### கனங்கே

மாத்தறை, கனங்கே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனங்கே கடை வீதி பிரதேசத்தில் நேற்று முன்தினம் கனங்கே பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 02 கஜமுத்துகளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கனங்கே பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், கனங்கே பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பணத்தை திருடிய நால்வர் கைது

### வெல்லம்பிட்டிய

வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்ட்ட வெலேவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் மதியம் நால்வர் 18 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை திருடிச் சென்றுள்ளதாக வெல்லம்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்nனுடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 17 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பணத்துடன் சந்தேகநபர்களான நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

களனி மற்றும் கேகொட கொலன்னாவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 29 மற்றும் 43 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவரினால் தனது வர்த்தக நிலையத்தின் பணியாளர் ஒருவருக்கு காசோலையை மாற்றி பணத்தை எடுத்துவருமாறு அறிவித்துள்ளார். இந்நிலையில் குறித்த பணியாளர் மேலும் மூவருடன் இணைந்து திட்டமிட்டு அந்த காசோலையை திருடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





## 22 நாட்களாக தொடரும் போர்

# தலைநகர் கீவ்வின் மையத்தை தொட்ட ரஷ்யா

## வீழுமா உக்ரைன்?

உலக செய்திகள்



மரியுபோல்மீதான தாக்குதலில் உயிரிழந்தவர்களை ஒரே குழியில் புதைத்தை அவலம்



மரியுபோல் நகர் மீதான தாக்குதலில் பெற்றோரை இழந்த சிசுக்கள்...

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இன்றுடன் 22ஆவது நாட்களாகின்றன. சுமார் மூன்று வாரங்கள் தீவிர தாக்குதல் நடத்திவரும் ரஷ்யா, உக்ரைனின் பல நகரங்களை தங்களின கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள போதும் தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது மிகப்பெரிய நகரான கார்கீவை கைப்பற்ற முடியாமல் திணறிவருகிறது.

உக்ரைன், நேட்டோ நாடுகளின் கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சர்வதேச நாடுகளின் எதிர்ப்பை கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி போர் தொடுத்தது. இன்று 22ஆவது நாளாகவும் தாக்குதல் தொடர்கிறது.

உக்ரைன் தலைநகர் கீவ்வின் புறநகர்களில் போரிட்டுவந்த ரஷ்யப் படைகள், தற்போது நகரி ன் மையப்பகுதியை நெருங்கியுள்ளன.

**பாடசாலை மீது வான்வெளி தாக்குதல்; 7 சடலங்கள் மீட்பு**

இந்நிலையில், தெற்கு உக்ரைனின் மைகோலாயிவ் பகுதியிலுள்ள பாடசாலை மீது ரஷ்யா நடத்திய வான்வெளி தாக்குதலில் பாடசாலை கட்டடத் தொகுதி தரைமட்டமானது. இடிபாடுகளுக்கிடையே 7 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும், காயமடைந்த 3 பேர் மீட்கப்பட்டதாகவும் உக்ரைனின் அவசர சேவை மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் அதிகாலையில் 15 மாடி குடியிருப்புக் கட்டடத்தை குண்டுவீசி தகர்த்துள்ளது.

**ரஷ்யா இரசாயன தாக்குதல் மேற்கொள்ளக்கூடும்**

''உக்ரைன் மீது ரஷ்யா இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தக்கூடும். இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தும் பட்சத்தில் அதற்கான விலையை ரஷ்யா தரவேண்டியது இருக்கும்'' என நேட்டோ அமைப்பின் பொதுச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டென்பெர்க் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரஷ்யாவுக்கு பிற நாடுகள் ஆயுதங்கள் அல்லது பிற வழிகளில் உதவும் பட்சத்தில் உக்ரைன் மீதான கொடூர போரை தொடர வழிவகுக்கும். இந்த போர் மரணம், துன்பம் மற்றும் பெரும் அழிவை ஏற்படுத்துகிறது. சர்வதேச சட்டத்தை நிலைநாட்ட சீனா கடமைப்பட்டுள்ளது. நாங்கள் சீனாவை நெருக்கமாக கண்காணித்து வருகிறோம். உலகின் மற்ற நாடுகளுடன் சீனா சேர வேண்டும். உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் கொடூரமான ஆக்கிரமிப்பைக் கண்டிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

**கீவ்வுக்கு விரைந்த ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள்**

போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கியை நேரில் சந்தித்துப் பேசுவதற்காக போலந்து, செக்



குடியரசு, ஸ்லோவேனியா ஆகிய நாடுகளின் பிரதமர்கள் தலைநகர் கீவுக்கு ரயிலில் புறப்பட்டுள்ளனர்.

போலந்து பிரதமர் மாடேயுஸ் மொராவீக்கி, செக் குடியரசு பிரதமர் பீட்டர் ஃபியாலா, ஸ்லோவேனிய பிரதமர் ஜொனெஸ் ஜொன்சா ஆகிய அந்த மூவருடன் பாதுகாப்பு விவகாரங்களுக்கான போலந்து துணைப் பிரதமர் ஜரோஸ்லா காக்ஸின்ஸ்கியும் உக்ரைன் செல்கின்றார்.

இந்த 3 நாடுகளும் நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**24இல் அவசரமாக கூடுகிறது நேட்டோ**

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் பற்றி விவாதிக்க பைடன் தலைமையில் நேட்டோ அமைப்பின் கூட்டம் அடுத்த வாரம் பெல்ஜியத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நேட்டோ அமைப்பின் பொதுச் செயலர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் வெளியிட்டிருக்கும் அறிவிப்பொன்றில் எதிர்வரும் 24ஆம் திகதி பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் நேட்டோ அமைப்பின் அவசர கூட்டம் நடைபெறவிருப்பதாக தெவித்துள்ளார்.

30 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் இந்தக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ-பைடன், உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பின் விளைவுகளை பற்றி பேச இருப்பதாக தெரிவித்துள்ளார்.

**உருக்குலையும் மரியுபோல்**

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா, அந்நாட்டையே முற்றிலுமாக சிதைத்து வருகிறது. சுமார் 10 நாட்களாக மரியுபோல் நகரில் தாக்குதல் நடத்தி, அந்நகரையே உருக்குலைத்துவிட்டது. கார்கீவ் உள்ளிட்ட நகரங்களிலும் மருத்துவமனைகள், வர்த்தக கட்டடங்கள், குடியிருப்புகள், கட்டடங்கள் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளன. கடந்த சில நாட்களாக தலைநகர் கீவ்வின் புறநகர்ப் பகுதிகளில் ரஷ்யா தாக்குதல் நடத்திவந்த நிலையில், தற்போது தலைநகருக்குள்ளும் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இன்று 22 நாளாகவும் தாக்குதல் தொடர்கிறது.

கீவ்வின் புறநகரில் அமைந்துள்ள இர்பின், ஹோஸ்டோமெல் மற்றும் புச்சா போன்ற பகுதிகளில் குடியிருப்புகள் மீது குண்டுகள் வீசப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் அதிகாலை தலைநகர் கீவ்விலுள்ள மிகப் பெரிய 15 மாடி குடியிருப்புக் கட்டடம் தகர்க்கப்பட்டது. குண்டுவீச்சில் கட்டடத்தில் பயங்கர தீ பரவியதால், தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து அங்கு தங்கியிருந்த மக்களை காப்பாற்றினர். இதில் தீயணைப்பு வீரர் ஒருவர் உட்பட 2 பேர் பலியாகினர். கட்டடம் முற்றிலும் வசிக்க தகுதியற்றதாக உருக்குலைந்து போயுள்ளது. கட்டடத்தின் அருகிலுள்ள ரயில் நிலைய நுழைவாயில் பகுதியும் சேதமடைந்தது. இதனால், இனி அந்த ரயில் நிலையத்தில் ரயில்கள் நிற்காது என உள்ளூர் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து கீவ் பிராந்திய தலைவர் ஓலெஸ்கி குலேபா தெரிவிக்கையில்,

"தலைநகரின் பல வீதிகள் இரும்பு, கொன்கிரீட் சிதறல்களால் நிரம்பியுள்ளன. மக்கள் சுரங்க ரயில் நிலையங்களில் தொடர்ந்து தஞ்சமடைந்துள்ளனர். நகரை விட்டு வெளியேறுவதற்கு கூட அவர்கள் அஞ்சி வெளியே வர மறுக்கின்றனர்'' - என்றார்.

**அழிவுற்றது விமான உற்பத்தித் தொழிற்சாலை**

இதேபோல், கீவ்விலுள்ள மிகப் பெரிய விமான உற்பத்தித் தொழிற்சாலையான ஆன்டனோவ் விமான தொழிற்சாலையை ரஷ்யப் படைகள் முற்றிலும் அழித்துள்ளன. ஏற்கனவே, உலகின் மிகப்பெரிய சரக்கு விமானத்தை தாக்கி தகர்த்த ரஷ்யா தற்போது விமான உற்பத்தி ஆலையையும் அழித்து விட்டது.

இதுவரை ரஷ்ய இராணுவம் 900 ஏவுகணைகளை ஏவியிருப்பதாக அமெரிக்க உளவுத்தகவல்கள் தெரிவிக்கின்றன. சுமார் 31 மருத்துவமனைகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகவும், 100இற்கும் மேற்பட்ட மருத்துவமனை, கிளீனிக் உள்ளிட்ட சுகாதார மையங்களின் சில பகுதிகளில் குண்டுவீச்சில் தகர்க்கப்பட்டதாகவும் உக்ரைன் அரசு தெவித்துள்ளது.

தற்போது ரஷ்யப் படைகள், தலைநகர் கீவ்வின் மையப் பகுதியிலிருந்து 15 கி.மீ. தொலைவில் முகாமிட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால், இன்னும் அடுத்த சில நாட்களில் தாக்குதலை தீவிரப்படுத்தி தலைநகரை கைப்பற்ற ரஷ்ய இராணுவம் உச்சக்கட்டப் போரில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரஷ்யப் படைகள் மிகவும் நெருக்கத்தில் வந்துவிட்டதால், தலைநகர் கீவ் இன்னும் எத்தனை நாட்களுக்கு தாக்குப் பிடிக்கும் என்று தெரியவில்லை. ரஷ்யப் படையிடம் விரைவில் அது வீழலாம் என கருதப்படுகிறது.

உக்ரைனின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்திற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் முழு ஆதரவை உறுதிபடுத்துவதே இந்தப் பயணத்தின் நோக்கம் என்று போலந்து அரசு தெரிவித்துள்ளது. வீரர்கள் எண்ணிக்கையிலும்,



ஆயுதத்திலும் ரஷ்யா மிகப்பெரிய படையாக இருந்தாலும், உக்ரைனுக்கு மேற்கத்தேய நாடுகள் ஆயுதங்களை வழங்குவதால் இவ்வளவு நாளும் உக்ரைனால் போர்க்களத்தில் தாக்குபிடிக்க முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

**30 இலட்சம் பேர் அகதிகளாக வெளியேற்றம்**

இன்று 22 நாளாகவும் தொடரும் போரால் உக்ரைனிலிருந்து 30 இலட்சத்துக்கும் அதிகமானோர் அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர் என ஐ.நா. அகதிகளுக்கான முகமை தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக 18 இலட்சம் பேர் போலந்தில் தஞ்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 10 இலட்சத்திற்கும் அதிகமானோர் பல்வேறு நகரங்களில் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. உக்ரைன் போர் தொடங்கிய நாளிலிருந்து இதுவரை 97 குழந்தைகள் உயிரிழந்திருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி அறிவித்துள்ளார்.

**ஒளிப்பதிவாளர் ஒருவர் பலி**

உக்ரைனில் தனியார் செய்தி நிறுவனத்தின் ஒளிப்பதிவாளராக பியர் ஜாக்ர்ஸெவஸ்கி, கீவ் நகருக்கு வெளியே வாகனத்தில் செல்லும்போது குண்டு வீச்சு தாக்குதலில் கொல்லப்பட்டார்.

லண்டனைச் சேர்ந்த பியர் ஜாக்ர்ஸெவஸ்கி, கடந்த பெப்ரவரி மாதம் முதல் உக்ரைனில் பணிபுரிந்து வந்துள்ளார். அவரது சக ஊழியரான ஒளிப்பதிவாளர் பெஞ்சமின் ஹாலும் பலத்த காயமடைந்தார்.

ஏற்கனவே இர்பின் நகர தாக்குதலில், அமெரிக்க ஊடகவியலாளர் ப்ரெண்ட் ரெனாவ்ட் (வயது 51) கொல்லப்பட்டதுடன், மேலும் இரண்டு ஊடகவியலாளர்கள் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

**கீவ் நகரில் ஊரடங்கு**

தலைநகர் கீவ்வில் ரஷ்யா தீவிர தாக்குதல் நடத்தி வருவதைத் தொடர்ந்து, நேற்றுமுன்தினம் முதல் 36 மணி நேரத்திற்கு கடுமையான ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மேயர் விடாலி கிளிட்ச்கோ விடுத்துள்ள அறிக்கையில்,

''இது கடுமையான, ஆபத்தான தருணம். எனவே, மக்கள் 2 நாட்கள் வீட்டைவிட்டு வெளியே வர வேண்டாம். சைரன் எச்சரிக்கை இல்லாவிட்டாலும், பதுங்கு குழிகளிலேயே இருங்கள். செவ்வாய் இரவு 8 மணிமுதல் வியாழன் இரவு 7 மணிவரை ஊரடங்கு அமுலில் இருக்கும். இது இராணுவத்தின் உத்தரவு'' என தெரிவித்துள்ளார்.

**ரஷ்யத் தொலைக்காட்சியில் போருக்கு எதிராக பதாகை**

ரஷ்யாவில் உக்ரன் போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் வலுத்து வருகின்றன. இதுவரை போராட்டக்காரர்கள் 15,000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுபோன்ற போராட்டங்களில் ஈடுபடுவோருக்கு 8 ஆண்டுவரை சிறைத்தண்டனை விதிக்கும் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி, உக்ரைன் போர் செய்திகளை வெளியிட்டால் 15 ஆண்டுவரை சிறைத்தண்டனை விதிக்கும் சட்டத்தையும் அந்நாட்டு ஜனாதிபதி புட்டின் கொண்டுவந்துள்ளார்.

இவ்வாறான நிலையில், ரஷ்யாவின் அரச தொலைக்காட்சியான 'சேனல்-1'இன் நேரடி ஒளிபரப்பில் பெண் செய்தி ஆசிரியர் மரினா ஓவ்சியானிகோவா என்பவர் 'போர் வேண்டாம்' என உக்ரைனை போரை கைவிடக் கோரிய பதாகைகளை ஏந்தினார். செய்தி வாசிக்கும் பெண்ணுக்கு பின்புறம் பதாகையை காட்டிய அவன் தைரியத்தை பலரும் பாராட்டுகின்றனர். ஆனால், இதற்காக மிகவும் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடலாம். தற்போது அவர் மாயமாகியுள்ளார். மரினா எங்கிருக்கிறார் என அவரது வழக்கறிஞருக்கு கூட தெரியவில்லை.

**13,500 ரஷ்ய வீரர்கள் பலி**

உக்ரைன் தாக்குதலில் இதுவரை 13,500 ரஷ்யப் படைகள் கொல்லப்பட்டுள்ளர்.

இதுதொடர்பில் உக்ரைன் வெளியுறவுத் துறை வெளியிட்ட ட்விட்டர் பதிவில்,

மார்ச் 15 வரை 13,500 இராணுவ வீரர்கள், 81 விமானங்கள், 95 ஹெலிகொப்டர்கள், 404 பீரங்கிகள், 1,279 ஆயுதம் ஏந்திய வாகனங்கள், 640 வாகனங்கள், 3 போர்க் கப்பல்கள் உள்ளிட்டவை ரஷ்ய படை இழந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## புட்டின் போர் குற்றவாளியென தீர்மானம் நிறைவேற்றிய அமெரிக்கா



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ரஷ்யாவுக்குள் நுழைய அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

இந்நிலையில், ''ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஒரு போர்க்குற்றவாளி'' என்று அமெரிக்க நாடாளுமன்றம் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் போர் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் அமெரிக்கா, ரஷ்யா மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

ரஷ்யாவின் இறக்குமதிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டு 370 ரஷ்ய நிறுவனங்களுக்கு அமெரிக்கா அபராதமும் விதித்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக ரஷ்யாவும் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**பொருளாதாரத் தடை**

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், வெளியுறவுத்துறை அமைச்சர், பாதுகாப்புத்துறை அமைச்சர், கூட்டு இராணுவத் தளபதிகளின் தலைவர் உள்ளிட்ட பல்வேறு உயர் அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் ரஷ்யாவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஜோ பைடன், சி.ஐ.ஏ. தலைவர் வில்லியம் பர்ன்ஸ், அமெரி க்க பாதுகாப்புத்துறை அமைச்சர் லாயிட் ஆஸ்டின், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் உள்ளிட்ட 13 பேர் மீது ரஷ்யா பொருளாதாரத் தடைகளை ரஷ்யவிதித்துள்ளது.

ஆயினும் அமெரிக்காவுடனான இராஜாங்க தொடர்புகள் தொடர்வதாக ரஷ்யாவின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் அறிவித்துள்ளார்

இதனிடையே ''ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஒரு போர்க்குற்றவாளி'' என்று அமெரி க்க நாடாளுமன்றம் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்தத் தீர்மானத்தை குடியரசுக் கட்சி எம்.பி. லிண்ட்ஸே கிரஹாம் முன்மொழிந்தார். இதனை குடியரசுக் கட்சி, ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் அனைவருமே ஆதரித்தனர். இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் மூலம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் பிற நாடுகள் உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர்க் குற்றங்கள் குறித்த விசாரணையை முன்னெடுக்க உதவும்.

# இலங்கை உலகக்கிண்ணம் வென்று இன்றுடன் 26 வருடங்கள் நிறைவு

## சம்பியனான இலங்கை அணி கடந்துவந்த பாதை

- ★ பாதுகாப்பை காரணங்காட்டி இலங்கை வர மறுத்த ஆஸி., மே.இ. தீவுகள்
- ★ இலகுவாக காலிறுதிக்கு நுழைந்த இலங்கை
- ★ இந்தியாவின் தோல்வியை தாங்க முடியாமல் தீ வைத்த ரசிகர்கள்
- ★ முதல் முறையாக 10இற்கும் மேற்பட்ட அணிகள்

ஏ.அகீல் சிஹாப்

இலங்கை என்ற ஒரு சிறிய தீவை இந்த கிரி க்கெட் உலகம் திரும்பிப் பார்த்து, அதாவது இலங்கை கிரிக்கெட் அணி ஐ.சி.சி. உலகக்கிண்ணத்தை வென்று இன்றுடன் 26 வருடங்கள் நிறைவுபெறுகின்றன. கடந்த 1996ஆம் ஆண்டு பாகிஸ்தானின் லாகூர் மண்ணில் இடம்பெற்ற ஆறாவது ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் பலமிக்க ஆஸி. அணியை வீழ்த்தி அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை அணி முதல் தடவையாக உலகக்கிண்ணத்தை முத்தமிட்டது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளில் 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதிமுதல் மார்ச் மாதம் 17ஆம் திகதிவரை 'வில்ஸ் உலகக்கிண்ணம்' என்ற பெயரில் ஆறாவது ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடர் நடைபெற்றது. மொத்தமாக 38 போட்டிகளில் 12 அணிகள் கலந்துகொண்டன. ஐ.சி.சி. உலகக்கிண்ண வரலாற்றில் 10இற்கும் மேற்பட்ட அணிகள் கலந்துகொண்டமை இதுவே முதல் முறையாகும்.

கலந்துகொண்ட 12 அணிகளும் 2 குழுக்களாக பிரிக்கப்பட்டன. இலங்கை, ஆஸி., இந்தியா, மே.இ.தீவுகள், சிம்பாப்வே, கென்யா அணிகள் ஏ குழுவிலும், தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், நியூசிலாந்து, இங்கிலாந்து, ஐக்கிய அரபு இராச்சியம், நெதர்லாந்து அணிகள் 'பி' குழுவிலும் இடம் பெற்றன. லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவிலுள்ள அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும்.

குழு 'ஏ'யின் லீக் போட்டி முடிவுகளின் அடிப்படையில் இலங்கை 5 போட்டிகளில் விளையாடி ஐந்திலும் வெற்றிபெற்று 10 புள்ளிகளுடன் முதலிடம் பெற, அவுஸ்திரேலியா 5 போட்டிகளில் விளையாடி 3 இல் வெற்றியையும், 2 இல் தோல்வியையும் சந்தித்து 6 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தைப் பெற்றது. இந்தியா மூன்றாமிடத்தையும், மே.இ.தீவுகள் நான்காமிடத்தையும், சிம்பாப்வே ஐந்தாமிடத்தையும், கென்யா ஆறாமிடத்தையும் பெற்றன.

குழு 'பி'யின் லீக் போட்டி முடிவுகளின் அடிப்படையில், தென்னாபிரிக்கா ஐந்து போட்டிகளில் விளையாடி ஐந்திலும் வெற்றிபெற்று 10 புள்ளிகளுடன் முதலிடத்தையும், பாகிஸ்தான் ஐந்து போட்டிகளில் விளையாடி 4இல் வெற்றியையும், ஒரு போட்டியில் தோல்வியையும் சந்தித்து 8 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தையும் பெற்றன. நியூசிலாந்து மூன்றாமிடத்தையும், இங்கிலாந்து நான்காமிடத்தையும், ஐக்கிய அரபு இராச்சியம் ஐந்தாமிடத்தையும், நெதர்லாந்து இறுதி இடத்தையும் பெற்றன.

அதன்படி லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 4 இடங்களை பிடித்த அணிகள் காலிறுதிக்கு தகுதிபெற்றன. குழு 'ஏ'யில் இலங்கை, ஆஸி., இந்தியா மற்றும் மே.இ.தீவுகள் அணிகளும், குழு 'பி'யில் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளும் காலிறுதிக்குள் நுழைந்தன.

குழு 'ஏ'யின் லீக் சுற்றில் ஆஸி., மே.இ. தீவுகள் அணிகள் இலங்கையில் போதிய பாதுகாப்பு இல்லை என்று காரணங்காட்டி இலங்கை வந்து விளையாட மறுத்தமையினால் இரு ஆட்டங்களிலும் இலங்கை அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதனால் இலங்கை அணி இலகுவாக 4 புள்ளிகளை பெற்று காலிறுதி நுழையும் வாய்ப்பை உறுதிசெய்தது.

1996ஆம் மார்ச் மாதம் 9ஆம் திகதி காலிறுதியின் இரு போட்டிகள் இடம்பெற்றன. இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை அணி அரையிறுதிக்குள் நுழைந்தது. அன்றைய தினம் நடைபெற்ற மற்றைய காலிறுதியில் பாகிஸ்தானை 39 ஓட்டங்களினால் வெற்றிபெற்ற இந்தியா, அரையிறுதிப் போட்டிக்கு நுழைந்தது.

மார்ச் மாதம் 11ஆம் திகதி காலிறுதியின் இரு போட்டிகள் இடம்பெற்றன. இங்கிலாந்து அணியை 19 ஓட்டத்தினால் வீழ்த்திய மேற்கிந்திய தீவுகள் அணி அரையிறுதிப் போட்டிக்கு நுழைந்தது. மற்றைய போட்டியில் நியூசிலாந்து அணியை 6 விக்கெட்டுகளினால் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி அரையிறுதிப் போட்டிக்கு நுழைந்தது. காலிறுதிப் போட்டிகளின் முடிவில் இலங்கை, இந்தியா, மேற்கிந்திய தீவுகள் மற்றும் ஆஸி. அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றன.

1996ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் திகதி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இடம்பெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் இலங்கை - இந்திய அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இப்போட்டியில் இந்திய அணி 31.1 ஓவர்களில் 8 விக்கெட்டினை இழந்து 120 ஓட்டங்களை பெற்று தோல்வியை நோக்கி சென்றது. இதனால் ஆத்திரமடைந்த இந்திய ரசிகர்கள், அரங்கில் தீ வைத்து, போத்தல், கற்களை மைதானத்தில் வீசி மேற்கொண்ட கலவரத்தினால் போட்டியை தொடர்ந்தும் கொண்டுசெல்ல முடியாமல் இடையில் நிறுத்தியதுடன், இலங்கை அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதனால் இலங்கை அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.



மார்ச் மாதம் 14ஆம் திகதி மொஹாலியில் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா - மே.இ.தீவுகள் மோதின. இதில் 5 ஓட்டத்தினால் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி இரண்டாவது அணியாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. மார்ச் மாதம் 17ஆம் திகதி பாகிஸ்தானின் லாகூரி ல் இடம்பெற்ற மாபெரும் இறுதிப் போட்டியில் அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கையும், மார்க் டெய்லர் தலைமையிலான அவுஸ்திரேலியாவும் மோதின.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 241 ஓட்டங்களை குவித்தது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் மார்க் டெய்லர் 74 ஓட்டத்தையும், ரிக்கி பொண்டிங் 45 ஓட்டத்தையும், மைக்கல் பெவன் 36 ஓட்டத்தையும் பெற்றனர். பந்து வீச்சில் அரவிந்த டி சில்வா 3 விக்கெட்டுகளையும், முரளிதரன், சமிந்த வாஸ், குமார் தர்மசேன மற்றும் சனத் ஜெயசூர்ய ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் வீழ்த்தினர்.



242 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடி ஆரம்பித்த இலங்கை அணி அணி 46.2 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 245 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று சம்பியனானது. இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் அரவிந்த டி சில்வா 107 ஓட்டங்களையும், அசங்க குருசிங்க 65 ஓட்டத்தையும், அர்ஜுன ரணதுங்க 47 ஓட்டத்தையும் அதிகப்படியாக பெற்றுக் கொண்டனர். இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி முதல் முறையாக உலகக் கிண்ணத்தை முத்தமிட்டது.



போட்டியின் ஆட்டநாயகனாக ஆட்டமிழக்காது 107 ஓட்டங்களை பெற்ற அரவிந்த டி சில்வா தெரிவானார். தொடரின் ஆட்டநாயகனாக 221 ஓட்டங்களையும், 7 விக்கெட்டுகளையும் வீழ்த்திய இலங்கை அணியின் அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூர்ய தெரிவானார். தொடரில் அதிக ஓட்டங்களை (523) இந்திய அணியின் சச்சின் டெண்டுல்கர் குவிக்க, தொடரில் அதிக விக்கெட்டுகளை (15) இந்திய அணியின் சுழற்பந்துவீச்சாளர் அனில் கும்ப்ளே வீழ்த்தினார்.




இலங்கை அணி உலகக்கிண்ணம் வென்று கடந்த ஆண்டு 25 வருடங்கள் நிறைவுபெற்ற நிலையில், உலகக்கிண்ணத்தை வென்ற இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க மற்றும் அணியின் அனைத்து வீரர்களையும் அழைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நிகழ்வில், 25 ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திலுள்ள நினைவுப் பதக்கங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை வழங்கப்பட்டதுடன், ஒரு முத்திரையும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1996 உலகக்கிண்ணத் தொடருக்காக டேவ் வட்மோரின் தலைமை பயிற்றுவிப்பில், **அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை குழாமில் இடம் பிடித்த வீரர்களின் விபரம்;**

*அர்ஜுன ரணதுங்க (அணித்தலைவர்), மார்வன் அத்தபத்து, உபுல் சந்தன, அரவிந்த டி சில்வா, குமார் தர்மசேன, அசங்க குருசிங்க, சனத் ஜெயசூரிய, ரொமேஷ் களுவித்தாரண, ரொஷான் மஹநாம, முத்தையா முரளிதரன், ரவீந்திர புஷ்பகுமார, ஹஸான் திலகரட்ன, சமிந்த வாஸ், காமினி விக்ரமசிங்க.*





## ஐ.பி.எல். வரலாற்றில் தோல்வியடைந்த அணிகளின் தலைவர்கள்

சர்வதேச கிரிக்கெட்டில் அபாரமாக செயற்பட்டபோதிலும் ஐ.பி.எல். வரலாற்றில் வெற்றியை ருசிக்கத் தவறிய 3 மோசமான அணித்தலைவர்கள் பற்றி பார்ப்போம்.

**குமார் சங்ககார**

ஐ.பி.எல். வரலாற்றில் டெக்கான் சார்ஜர்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் உள்ளிட்ட 3 அணிகளுக்காக குமார் சங்ககார தலைமை வகித்துள்ளார். 2009ஆம் ஆண்டு முதல் முறையாக அவர் தலைமையில் விளையாடிய பஞ்சாப் அணி 5ஆவது இடத்தைப் பிடித்தது. அதன்பின் 2011ஆம் ஆண்டு டெக்கான் சார்ஜர்ஸ் அணி 7ஆவது இடத்தைப் பிடித்தது. மொத்தத்தில் 47 போட்டிகளில் தலைமை செய்த அவர் வெறும் 15 வெற்றிகளை மட்டுமே பெற்றுள்ளார். 30 போட்டிகளில் தோல்வி அடைந்ததன் வாயிலாக 34.04% வெற்றி சராசரியை மட்டுமே பெற்றுள்ளார்.




**மஹேல ஜெயவர்தன**

ஐ.பி.எல். தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப், டெல்லி டேர்டெவில்ஸ், கொச்சி டஸ்கர்ஸ் கேரளா போன்ற அணிகளுக்கு மஹேல தலைமை வகித்தபோதிலும் பெரியளவில் வெற்றிகளை வாங்கித் தர முடியவில்லை. மொத்தத்தில் 30 போட்டிகளில் தலைமை வகித்த அவர் வெறும் 9 வெற்றிகளை மட்டுமே பதிவுசெய்துள்ளார். அவர் தலைமையில் விளையாடிய அணிகள் 16 போட்டிகளில் தோல்வியடைந்தன. ஒரு போட்டி டையில் முடிந்தது.

**அஜிங்கிய ரஹானே**

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக 25 ஐ.பி.எல். போட்டிகளில் தலைவராக செயற்பட்ட ரஹானே அதில் 9 வெற்றிகளை மட்டுமே பெற்றுக் கொடுத்தார். 16 போட்டிகளில் அவர் தலைமையில் ராஜஸ்தான் ராயல்ஸ் தோல்வியடைந்தது.




## இறுதிப் போட்டிக்கு தெரிவான மருதமுனை எவரெடி விளையாட்டுக் கழகம்



(மருதமுனை நிருபர்)

அம்பாறை மாவட்ட உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 'ஏ' தர கழகங்களுக்கு இடையிலான சம்பியன் கிண்ண சுற்றுப் போட்டியின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கல்முனை பிரிலியன்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தாடிய மருதமுனை எவரெடி விளையாட்டுக் கழகம் 2 - 0 எனும் கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இவ்றுதிப் போட்டியில் கல்முனை சனிமெயுன்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மருதமுனை எவரெடி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## மருதூர் ப்ரீமியர் லீக்கின் இறுதிப் போட்டி இன்று





(நிந்தவூர் நிருபர்)

சாய்ந்தமருது கிரிக்கெட் சம்மேளனம் ஒழுங்குசெய்து நடத்திக்கொண்டிருக்கும் 15 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்று சாய்ந்தமருது பொலிவேரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் 32 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்ற குறித்த தொடர் கடந்த 6 மாத காலமாக இடம்பெற்றுவந்த நிலையில், இறுதிப்போட்டி கல்முனை டொப்ரேங் விளையாட்டுக் கழகத்திற்கும் சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இன்று இடம்பெறவுள்ளது.

சாய்ந்தமருது கிரிக்கெட் சம்மேளனத்தின் தலைவர் ரீ.கே.எம்.ஜலீல் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்விற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகவும், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் கௌரவ அதிதியாகவும், அம்பாறை மாவட்ட கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் இந்திக நளின் ஜயவிக்ரம, செயலாளர் சிதத் லியனாராய்ச்சி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7